


சிலம்பு உரு | திருவள்ளுவர் ஆண்டு ககூஅஉ, சித்திரை மே, 1951 | பரல் க

# மெய்யுணர்வுச் செல்வர்

## காஞ்சி, நாகலிங்க முனிவரர்

[கழகப்புலவர், சித்தாந்த பண்டிதர், ப. இராமநாதபிள்ளை]

" வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பித்
தாழ்வெனும் தன்மை யோடும் சைவமாம் சமயம் சாரும்
ஊழ்பெறல் அரிது சால உயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியி னானைப் போற்றுவார் அருள்பெற் றாரே."

—சித்தியார் : உ. கக.

எழுவகைப் பிறப்பினுள்ளும் விழுமியது மக்கட்பிறப்பே. இது,

" மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."

—தொல். பொருள்: ருஅஅ.

என்னும் ஆறாயிரம் யாண்டுகளுக்குமுன் தோன்றிய ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்தால் நன்குணரலாம். இந்நூல் தொன்மைச் செந்தமிழ் முழுமுதல் நூலாக நம் கைக்கண் எஞ்சி நிலவும் வைப்பாகும். இதன்கண் 'ஆறறி'வென்பது பகுத்துணரும் மன உணர்வைக் குறிப்பதாகும். அதுவே இரட்டுற மொழிதலால் கடவுள் திருவடியைக்கூடும் வழியை அறியும் அறிவென்பதும் ஆகும். ஆறு-வழி.

ஓரறிவுமுதல் ஐயறிவு ஈறாகவுள்ள ஏனைய உயிர்கள் உடலோம்பும் வழிகளையே அறிந்து ஒழுகும் நிலையின. அதுவும் பெரும்பாலும் முன்பின் உணர்ச்சியின்றி நிகழ்வுணர்ச்சி ஒன்றே கொண்டுவாழும் நிலையின. மொழியும் நூலும் வாய்க்கப் பெறாத்தன்மைய. அதனால் தாம் பெற்றிருக்கும் உடலழிவின்

பின் என்ன நேரும் என எண்ணி யொழுகற்கு இடம் வாயா தன. மேலும், அவை வீட்டியல் நெறியை எய்தும் அரும் பேறு பெறுதன. மக்கட் பிறப்பொன்றே அப்பெரும் பேறு பெற்ற சிறப்புடையதாகும். ஒருவன் இப் பிறப்பை எய்துதல் "கடலைக்கையால்நீந்தினன் காரியத்"தோடொக்கும்.

அரிய பெரிய மக்கட் பிறப்பை எய்தியும் பலர் கடவுள் நெறியைக் கருதாது உடலோம்பும் நெறி ஒன்றையே கருதி உய்யுநெறி நாடாது விலங்கினும் தாழ்வாய் நெறியல்லா நெறிச் சென்று எய்த்துப் 'பிறப்பதற்கே ஆளாகி இறக்கின்றார்கள்.' அத்தகையாரை நெறிப்படுத்துதற் பொருட்டு ஆண்டவன் அருளால் பெருமக்கள் பலர் தோன்றுவர். அவர்கள் அச் செயற்கரும் செயலைச் சிவனருளால் செய்துமுடித்துச் சிறப் பெய்துவர். அவர்கள் 'ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர்' என்றும், 'முனிவர்' என்றும், 'அடியார்' என்றும், 'நாயன்மார்' என்றும் சிறப்புப் பெயர் எய்துவர்.

அவர்கள் நிலையாவாழ்வு நிறைய எய்தியக்கண்ணும் நிலைக்குமென எண்ணி மயங்கிச் செருக்குறார். மிக்க துன்பமாம் வறுமைஎய்தி வாழ வழியின்றி வருந்துங்காலத்தும் தியங்கிச் சிறு தொழில் புரிந்து சிறுமையுறார். வாழ்வும் தாழ்வும் பகலும் இரவும்போல வரும் தன்மையன என்று ஓர்ந்து திண்ணிய ராய் எல்லார் மாட்டும் 'பணிவும் இன்சொலும்' பணித்தவா றொழுகும் பண்பாடும் கொண்டு வாழ்வார். அத்துறையில் நம் **காஞ்சி நாகலிங்கமுனிவர்** தனிசிறந்தவர் ஆவர்.

**பிறப்பு**

'கல்வியைக் கரையிலாத காஞ்சிமாநகர்' என்று திருமுறை யால் சிறப்பிக்கப்பெறும் காஞ்சிநகரை அடுத்த ஏகனும் பேட்டை என்பது முனிவர் பிறப்பதற்குத் தவம்புரிந்த திரு வூராகும். தந்தையார் திருப்பெயர் **சரவணப்பெருமாள்** முதலி யார் என்ப. தாயார் **மனோன்மணி** அம்மையாராவர். இவர் தம் அருந்தவப்பேற்றால் எண்பத்தாறு ஆண்டுகளுக்கு முன் இரத்தாட்சி யாண்டு ஐப்பசித் திங்கள் ஆறும் நாள் தோன்றினார். தந்தையார் வாலாசாபாத்துப் படைப்பள்ளி (மிலிடரி பாட சாலை)யில் ஆசிரியராக இருந்தார்.

**கல்வி**

முனிவரை ஐந்தாண்டில் பள்ளியில் இருத்தினர். ஆசிரியர் கச்சபாலய தேசிகர் ஆவர். இவர் சரணவபபெருமாள் முதலி யார்பால் பாடங்கேட்ட தக்கார். மிக்க உவகையோடும் தம் ஆசான் மகனுக்கு எழுத்தறிவிக்கும் விழுத்தொழில் புரிந்தனர்.

இந்நிலையில் முனிவர்தம் தந்தையார் பொன்னுலகு மன்னினர். தந்தையார் பிரிவின்பின் அண்மையில் உள்ள ஐயம்பேட்டைக்குச் செல்லவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. அவர்தம் பாட்டியார்வீடு ஆங்கிருந்தமையால், அங்கு வள்ளுவப்பாக்கம் சீனிவாச முதலியாரிடம் கல்வி கற்றனர்.

### தொழில்

தம் பன்னிரண்டாம் அகவைக்கண் குலத்தொழிலாம் நெய்தற்றொழிலை மேற்கொண்டனர். இரண்டொரு ஆண்டுகள் அத்தொழிலில் ஈடுபட்டுழைத்தனர்.

### சென்னை வாழ்க்கை

சென்னை கமிசேரியட் ஆபீஸ் மானேஜராக இருந்த ஐயம்பேட்டை பஞ்சாட்சர முதலியார் (இரங்கூன் முருகேச முதலியார் பெயரன்) அவர்களால் முனிவர் சென்னைக்கு வரவழைக்கப் பெற்றனர். சென்னைமாநகரின்கண் சிறந்து விளங்கிய செங்குந்தமித்திரர் தலைச்சங்கத்தின் அமைச்சரும், சுதேசமித்திரன் முன்னாள் ஆசிரியருமாகத் திகழ்ந்த திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி., அவர்கள் பாட்டனார் புசங்கராய முதலியாரவர்கள் சார்பில் வளர்ந்து வந்தனர். இப்புசங்கராய முதலியாரவர்களின் மனைவியாரும் முனிவரரின் தாயாரும் உடன் பிறந்தாராவர். இக்குடும்பத்தார் ஏறத்தாழ இருநூற்றைம்பது ஆண்டாக வழிவழி ஆங்கிலங் கற்றுச் சிறப்புற்றவர்.

### செந்தமிழ்ப்பற்று

ஆங்கிலச்சூழலில் வாழ்ந்த ஒரு பெருங் குடும்பத்தாரால் வளர்க்கப்பெற்றும் "பண்டை நற்றவத்தால் பரமனைப் பத்தி பண்ணும்" இறைபணிக்கு ஈடும் எடுப்புமிலாது 'ஒன்றுவுலகத்து உயர்ந்து' நின்று நிலவும் தமிழ்மொழிக்கண் தணவா ஆர்வம் கொண்டனர் நம் முனிவர். அந்நாளில் தமிழில் சிறந்து விளங்கிய அட்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியாரவர்களிடம் முறையாகக் கற்றனர். மேலும் மயிலை சண்முகம் பிள்ளை அவர்கள், இராயபுரம் சக்காராவ் அவர்கள், திரு அண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி ஆறுமுகத்தம்பிரான் அவர்கள் முதலிய தக்கார் பலர்பாலும் மிக்குப் பயின்றனர். தம் இருபத்தோராம் அகவைக்கண் காஞ்சிபுரம் உபயவேதாந்தம் முத்துக்கச்சபேச்சுர சிவாச்சாரியாரிடம் சைவதீக்கை பெற்றார்.

### மெய்யுணர்வுத் தொண்டு

தம் அகவை இருபதில் சென்னைக்கண் முதன் முதலாகத் தோற்றுவிக்கப்பெற்று நிகழ்ந்துவந்த 'சைவ சித்தாந்த சபை'க் கூட்டங்களுக்குத் தவறாது சென்று தணியாக் காதலுடன்

தமிழமிழ்து செவிமடுத்துச் சிறந்தனர். இச்சபை திருமழிசை, தணிகாசலமுதலியார் அவர்கள் வீட்டில் நிகழ்ந்துவந்தது. பின்னர்ச் சென்னைச் '**சிவனடியார் கூட்டத்**'தைத் தொடங்கி வளர்ப்பதில் பெரும்பங்குகொண்டனர். சென்னை அருணாசலேச்சுரர் திருக்கோவில் மண்டபத்தில் நிறுவப்பெற்று நிகழ்ந்த '**மெய்கண்ட சந்தான சபையின்**' துணைத் தலைவராகப் பலவாண்டுகள் பணிபுரிந்தனர். இச்சபையின் சார்பாகத் '**தேவாரப் பாடசாலை**' ஒன்றையும் நடத்திவந்தனர்; சைவசித்தாந்த போதனை செய்வதன் பொருட்டுத் தாமே தோற்றுவித்த தனிப்பெரும் சிறப்பு வாய்ந்த '**மெய்கண்டான் கல்லூரி**' ஒன்றையும் ஈண்டே நிறுவி எழில்பெற நடத்திவந்தனர். இத் திருக்கோவிலின்கண் நிகழும் வைகறைப்பூசை முனிவரவர்களாலேயே நிகழ்த்துவிக்கப்பெற்றது. திருக்கோபுரப்பணியிலும் பங்குபெற்றனர்.

**தமிழ்நூல் வெளியீடு**

அச்சகம் ஒன்று நிறுவி, அரிய பெரிய தமிழ் நூல்களை வெளியிட்டுள்ளார்கள். திருவாவடுதுறை ஆதீன மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்களின் திருவருட்சார்பும் நம்முனிவரர்க்கு முற்றவத்தால் வற்றுவூற்றாகக் கிட்டியது. ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர் (அடுத்த மகாசன்னிதானம்) அவர்களும் முனிவரவர்களும் ஒருங்கு பாடங்கேட்டுப் பயின்ற ஒண்மையர். ஆதீனத் தம்பிரானவர்கள் அருந்துணையால் பல தமிழ்நூல்களை வெளியிட்டனர். திரு. பாண்டித்துரைத்தேவர் அவர்களின் வேண்டுகோளின் வண்ணம் '**சிவஞானபோதச் சிற்றுரை**'யைச் செவ்விய முறையில் வெளியிட்டனர்.

**சிவஞானபோதம்** உள்ளிட்ட சைவசித்தாந்த நூற்கள் **பதினுன்கினையும்** உரையுடன் ஒரே தொகுதியாகத் திருவாவடுதுறை ஆதீன மரபின்படி '**மெய்கண்ட சாத்திரம்**' என்னும் திருப்பெயர் சூட்டி வெளியிட்டனர். இந்நூல் வெளியீட்டின் விழுப்பம் நோக்கிச் சிவத்திரு அம்பலவாணதேசிகர் முனிவர்க்கு '**மெய்கண்டசாத்திரப் பிரசாரகர்**' என்னும் சிறப்புப் பட்டம் நல்கினர்.

'**திருவுந்தியார்,**' '**திருக்களிற்றுப்படியார்**' என்னும் செம்பொருட்டுணிவின் தலைநூல் வழிநூல்களைத் திருப்பனந்தாள் திருமடத் தலைவர் சிவத்திரு காசிவாசி சொக்கலிங்கத்தம்பிரான் துணைகொண்டு தனித்தும் வெளியிட்டனர். மேலும் **தாயுமானவர், பன்னிருதிருமுறை, காஞ்சிப்புராணம், காஞ்சிக் கட்டளைக்கலித்துறைப் புராணம், திருப்புகழ், சுந்தரர்தேவாரம், செங்குந்தர் பிரபந்தத்திரட்டு, காரனேசன் தமிழ்அகராதி** முதலியன முனிவரரால் திருத்தமுற வெளிவந்துள்ளன.

**குல முன்னேற்றம்**

'தக்கவன் ஒருவன் வாழத் தங்குலம் எல்லாம் வாழும்' என்னும் மிக்கவர் மெய்ம்மொழிப்படி, தங்குலமாம் **செங்குந்த மித்திரர்** குலவளர்ச்சியின் பொருட்டுச் செய்துள்ள தொண்டுகள் அளப்பில. பெரும் பெரும் கூட்டங்கள், இயக்கங்கள், கழகங்கள் ஆங்காங்கமைத்து அணிபெற நடத்தினர்: **செங்குந்த மித்திரன்** என்னும் சிறந்த வெளியீட்டைத் தொடங்கிவைத்துச் சின்னாட்களுக்குத் தாமே ஆசிரியராகவுமிருந்து அணிபெற நடத்தினர். 1927-ஆம் ஆண்டு தொடங்கப்பெற்ற இவ்விதழும் 1918-ல் தொடங்கப்பெற்ற குல இயக்கம், கழகம் முதலியவைகளும் தக்கார் பெருந்துணையில் சரிவர நிகழ்ந்துவருகின்றன.

**நூல்பல யாத்தல்**

திருத்தணிகை வண்ணமஞ்சரி, தென்கடம்பன்துறை பதிற்றுப்பத்து, வடபழனி மயிலேறுபெருமாள்மாலே, இரட்டைமணிமாலே, திரு ஆமாத்தூர் வண்ணங்கள், திரு எறும்பியூர்ப் புராணம் முதலியன இவர்களால் பாடப்பெற்றவை. பண்டையோர் செய்த தண்டமிழ் நூல்கள் அளப்பில இருக்கவும் பின்னுள்ள பேரன்புவாய்ந்த பெரியோர்கள் மீட்டும் மீட்டும் புத்தம் புதிய பொருளார்தரு உறுதி நூல்கள்யாத்தருள் புரிகின்றனர்; என்னே? முன்ேனோர் தொழுதனரே என்று யாமும் தொழாமலிருக்கவில்லே;—தொழுகின்றோம் என்க.

**சிறப்புப் பட்டங்கள்**

காஞ்சிபுரம் ஞானப்பிரகாச அடிகள்பால் இயற்கையிலேயே அகத்துறவுடன் விளங்கிய முனிவரர் புறத்துறவும் பூண்டனர். அந்நாள் தொட்டுக் காஞ்சி **நாகலிங்கமுனிவர்** என அழைக்கப்பெற்றனர். ஞானப்பிரகாச அடிகளால் '**கச்சியடிகள்**' என்ற பட்டமும், இலங்கைத் திரு. பொன்னம்பலம் பிள்ளேயவர்களால் '**வித்யாபிரசாரகர்**' என்ற பட்டமும், திருவாமாத்தூர் மடாதிபதி சிவத்திரு தண்டபாணி அடிகளால் '**வண்ணக் களஞ்சியம்**' என்ற பட்டமும் பூண்டுள்ளார்கள்.

**திருவூர்ச் செலவு**

முனிவர் தென்னுடு முழுவதும் குடும்பத்துடனும் தனித்தும் இருநான்கு எழின்முறையாய் அருள்வழிநடை (யாத்திரை) செய்துள்ளார்கள். இருப்புப் பொறியூர்தியாம் புகைவண்டி இல்லாத காலத்தும் கால்நடையாக எங்கும் சென்று இறைவனேப் போற்றியுள்ளார்கள். தென்னுட்டு வழிநடையில் முனிவர் பிறந்த குலத்தாரும், திருவாவடுதுறை ஆதீனத்தாரும், இராம

நாதபுரம் பாற்கர சேதுபதி மன்னரும், பிறரும் முனிவருக்கும் உடன் செல்வார்க்கும் உண்டி, உடை, உறையுள், ஊர்தி, வழிச் செலவு முதலிய பல பெருந்துணைகளும் புரிவித்துள்ளார்கள்.

வடநாட்டுக்கும் இவ்வாறே ஒருமுறை வழிநடை சென்றுள்ளார்கள். அச்செலவுக்குத் திருவாவடுதுறை ஆதீனத்தாரே பெருந்துணை புரிந்துள்ளார்கள். சென்ற சென்ற இடமெல்லாம் மெய்யடியார்களாலும் தமிழன்பர்களாலும் தக்க சிறப்பு எய்தினர். போமிடங்கள்தோறும் விரிவுரையும் மெய்யுணர்வுக் கொடையும் வழங்கி விழுத்தவ வேந்தரென விளங்கினர்.

**முத்து விழா**

1944-ஆம் ஆண்டு ஜூலைத்திங்கள் முதல்நாள் சென்னை கோகலே மண்டபத்தில் தமிழ்ப்பெரியார் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் முனிவரர்க்கு முத்து விழாச் சிறப்பாக நடைபெற்றது. விழா மலரும் வழங்கினர்.

**இறையடி யுறுதல்**

1950-ஆம் ஆண்டு ஜூலைத்திங்கள் ஒன்பதாம் நாள் 'புலனைந்தும் பொறி கலங்கி அறிவழிந்திட்டு ஐமேலுந்தி, அலமந்த போதாக அஞ்சேலென்று அருள்செய்வான்' அடியிணைக்கீழ் நலம்வந்த புலனோடும், நமச்சிவாய உரையோடும், நன்றாம் ஞான உணர்வோடும், வலம்வந்த தொழலோடும், வழியடிமைக்கு ஏற்ற வாழ்வு பெற்றுப் பேரின்பமுற்றனர். யாவரும் தொழுது வாழ்த்தினர். முனிவர்தம் வாழ்க்கைத் துணைவியார் இருபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் இறையடி எய்தினர்.

மக்கள் ஆண்பாலார் இருவரும் பெண்பாலாரொருவரும் தக்க கல்வியும் மிக்க முதன்மையும் பெற்று எல்லாச் செல்வத்துடனும் வாழ்ந்து வருகின்றனர். அருமை மகளார் ஆசிரியத் தொழில் பூண்டிருப்பதொன்றே குடும்பத்தார் கல்வியுயர்வைக் குறிக்கும் பெருங்குறியாகும். குடும்பத்தார்க்கு எங்கள் பரிவு உரித்தாகுக. முனிவரரும் தொண்டும் முக்காலும் வாழ்க.

முன்னாள் போன்றே இந்நாளும் முனிவ ரொருவர் தமிழ்சிவத்தில்
மன்னு நின்றார் எனுமகிழ்ச்சி வையங் கொள்ளா வளர்ச்சியதாம்
பொன்னார் காஞ்சி நாகலிங்க முனிவர் இறைதாள் புக்கனரால்
அன்னார் மெய்ந்நூல் அருந்தொண்டு வாழ்க அவர்தம் ஆவியொத்தே.

---

குறிப்பு :—வாழ்க்கைக்குறிப்பும் வயங்குருவத் தகடும் வழங்கி உதவிய செங்குந்தமித்திரன் செயலாளர்கட்கு எங்கள் நன்றி.

# பம்மல் விசயரங்க முதலியார்

[கழகப் புலவர், சித்தாந்த பண்டிதர், ப. இராமநாத பிள்ளை]

### பிறப்பும் படிப்பும்

1830-ஆம் யாண்டு மார்ச்சுத் திங்கள் முதல் நாள் பிறந்தார்கள். இளமையில் பச்சையப்பமுதலியார் தொடக்கப் பள்ளியில் கல்விபயின்றனர். இப்பொழுது பிரசிடென்சிக் கல்லூரி என வழங்கிவரும் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக இருந்த காலத்து அதில கற்றனர். திறமேலோர் தேர்ச்சி (Proficient) யில் இரண்டாவதாகத் தேறினர்; இதன்பொருட்டு அரசியலார் பொன்மோதிரம் ஒன்று வழங்கினர்.

### பரிசு

1851-ஆம் யாண்டில் இராபர்ட்சன் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய அமெரிக்கநாட்டு வரலாற்றை அழகுபெற மொழிபெயர்த்தனர். அதன் பொருட்டுப் பச்சையப்ப முதலியார் பரிசினைப் பெற்றனர். இந்நூல் 1852-ஆம் யாண்டு அச்சிடப் பெற்றது.

### தொண்டு

கவர்ன்மெண்டுக்கலாசாலையில் தமிழாசிரியராகச் சில காலம் தொண்டியற்றினர். பின் பள்ளிக்கூடங்களின் துணைக் கண்காணியாள (Deputy Inspector of Schools) ராகப் பணி புரிந்தனர். இப் பணி திண்டுக்கல் மதுரை முதலிய ஊர்களில் நிகழ்ந்தது. அதன்பின் சென்னையில் பள்ளிக்கூடத் துணைக் கண்காணியாளராக 1890-ஆம் ஆண்டுவரை ஆர்வமும், அறமுறையும், உரமும், உண்மையும்கொண்டு மக்கட்கு உறுதிபயக்கும் வகையில் தொண்டியற்றினர். அறுபதுயாண்டு நிறையும் அவ்வாண்டிலேயே வேலை விடுதிபெற்றனர். வேலைவிடுதிக் குரிய வழியூதியம் (Pension) பெற்று வாழ்ந்தனர்.

### தமிழ்நூல்கள் அச்சிடல்

தம் இளமைப் பருவத்தில் நிறுவப்பெற்ற உப யுக்த கிரந்த சபைக்காக, பள்ளிக்கு வேண்டிய தமிழ்நூல்களைச் செவ்விய முறையில் அச்சிட்டனர். மூன்றும் பாடப்புத்தகம் ஒன்றும் அச்சிட்டனர்.

நாதபுரம் பாற்கர சேதுபதி மன்னரும், பிறரும் முனிவருக்கும் உடன் செல்வார்க்கும் உண்டி, உடை, உறையுள், ஊர்தி, வழிச் செலவு முதலிய பல பெருந்துணைகளும் புரிவித்துள்ளார்கள்.

வடநாட்டுக்கும் இவ்வாறே ஒருமுறை வழிநடை சென்றுள்ளார்கள். அச்செலவுக்குத் திருவாவடுதுறை ஆதீனத்தாரே பெருந்துணை புரிந்துள்ளார்கள். சென்ற சென்ற இடமெல்லாம் மெய்யடியார்களாலும் தமிழன்பர்களாலும் தக்க சிறப்பு எய்தினர். போமிடங்கள்தோறும் விரிவுரையும் மெய்யுணர்வுக் கொடையும் வழங்கி விழுத்தவ வேந்தரென விளங்கினர்.

### முத்து விழா

1944-ஆம் ஆண்டு சூலைத்திங்கள் முதல்நாள் சென்னை கோகலே மண்டபத்தில் தமிழ்ப்பெரியார் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் முனிவரர்க்கு முத்து விழாச் சிறப்பாக நடைபெற்றது. விழா மலரும் வழங்கினர்.

### இறையடி யுறுதல்

1950-ஆம் ஆண்டு சூலைத்திங்கள் ஒன்பதாம் நாள் 'புலனைந்தும் பொறி கலங்கி அறிவழிந்திட்டு ஐமேலுந்தி, அலமந்த போதாக அஞ்சேலென்று அருள்செய்வான்' அடியிணைக்கீழ் நலம்வந்த புலனோடும், நமச்சிவாய உரையோடும், நன்றும் ஞான உணர்வோடும், வலம்வந்த தொழலோடும், வழியடிமைக்கு ஏற்ற வாழ்வு பெற்றுப் பேரின்பமுற்றனர். யாவரும் தொழுது வாழ்த்தினர். முனிவர்தம் வாழ்க்கைத் துணைவியார் இருபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் இறையடி எய்தினர்.

மக்கள் ஆண்பாலார் இருவரும் பெண்பாலாரொருவரும் தக்க கல்வியும் மிக்க முதன்மையும் பெற்று எல்லாச் செல்வத்துடனும் வாழ்ந்து வருகின்றனர். அருமை மகளார் ஆசிரியத் தொழில் பூண்டிருப்பதொன்றே குடும்பத்தார் கல்வியுயர்வைக் குறிக்கும் பெருங்குறியாகும். குடும்பத்தார்க்கு எங்கள் பரிவு உரித்தாகுக. முனிவரரும் தொண்டும் முக்காலும் வாழ்க.

முன்னாள் போன்றே இந்நாளும் முனிவ ரொருவர் தமிழ்சிவத்தில்
மன்னு நின்றார் எனுமகிழ்ச்சி வையங் கொள்ளா வளர்ச்சியதாம்
பொன்னார் காஞ்சி நாகலிங்க முனிவர் இறைதாள் புக்கனரால்
அன்னார் மெய்ந்நூல் அருந்தொண்டு வாழ்க அவர்தம் ஆவியொத்தே.

---

குறிப்பு :—வாழ்க்கைக்குறிப்பும் வயங்குருவத் தகடும் வழங்கி உதவிய செங்குந்தமித்திரன் செயலாளர்கட்கு எமகள் நன்றி.

# பம்மல் விசயரங்க முதலியார்

[கழகப் புலவர், சித்தாந்த பண்டிதர், ப. இராமநாத பிள்ளை]

### பிறப்பும் படிப்பும்

1830-ஆம் யாண்டு மார்ச்சுத் திங்கள் முதல் நாள் பிறந்தார்கள். இளமையில் பச்சையப்பமுதலியார் தொடக்கப் பள்ளியில் கல்விபயின்றனர். இப்பொழுது பிரசிடென்சிக் கல்லூரி என வழங்கிவரும் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக இருந்த காலத்து அதில் கற்றனர். திறலோர் தேர்ச்சி (Proficient) யில் இரண்டாவதாகத் தேறினர்; இதன்பொருட்டு அரசியலார் பொன்மோதிரம் ஒன்று வழங்கினர்.

### பரிசு

1851-ஆம் யாண்டில் இராபர்ட்சன் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய அமெரிக்கநாட்டு வரலாற்றை அழகுபெற மொழி பெயர்த்தனர். அதன் பொருட்டுப் பச்சையப்ப முதலியார் பரிசினைப் பெற்றனர். இந்நூல் 1852-ஆம் யாண்டு அச்சிடப் பெற்றது.

### தொண்டு

கவர்ன்மெண்டுக்கலாசாலையில் தமிழாசிரியராகச் சில காலம் தொண்டியற்றினர். பின் பள்ளிக்கூடங்களின் துணைக் கண்காணியாள (Deputy Inspector of Schools) ராகப் பணி புரிந்தனர். இப் பணி திண்டுக்கல் மதுரை முதலிய ஊர்களில் நிகழ்ந்தது. அதன்பின் சென்னையில் பள்ளிக்கூடத் துணைக் கண்காணியாளராக 1890-ஆம் ஆண்டுவரை ஆர்வமும், அறமுறையும், உரமும், உண்மையும்கொண்டு மக்கட்கு உறுதிபயக்கும் வகையில் தொண்டியற்றினர். அறுபதுயாண்டு நிறையும் அவ்வாண்டிலேயே வேலை விடுதிபெற்றனர். வேலைவிடுதிக்குரிய வழியூதியம் (Pension) பெற்று வாழ்ந்தனர்.

### தமிழ்நூல்கள் அச்சிடல்

தம் இளமைப் பருவத்தில் நிறுவப்பெற்ற உப யுக்த கிரந்த சபைக்காக, பள்ளிக்கு வேண்டிய தமிழ்நூல்களைச் செவ்விய முறையில் அச்சிட்டனர். மூன்றும் பாடப்புத்தகம் ஒன்றும் அச்சிட்டனர்.

**பல்கலைக் கழக உறுப்பினர்**

சென்னைப் பல்கலைக்கழக உறுப்பினராக அமர்த்தப்பெற்றார். பல ஆண்டுகள் பல்கலைக்கழகத் தமிழ்த்தேர்வுக் குழுவின் தலைவராய் அமர்ந்து தக்கவாறு செயலாற்றினர்.

**ஒப்புரவுப் பணி**

சென்னையில் விசயநகர மகாராசா ஏற்படுத்திய நான்கு பெண்பாடசாலைகளுக்குப் படியிலாப் பணி (Honorary)யாம் ஒப்புரவுத் தொண்டாற்றினர். இவர்கள் ஆற்றியதொண்டு அமைச்சுத் தொண்டாகும்.

ஆசிரியன்மார் தேர்வுக்காக ஏற்படுத்திய குழுவுக்கு அமைச்சராக இருந்து அரும்பணி புரிந்தனர்.

**அறநிலைக் காப்பாளர்**

பல ஆண்டுகள் நகராண்மைக் கழக ஆட்சிப்பொறுப்பாளர் (Municipal Commissioner) ஆக இருந்து பொதுநலத் தொண்டியற்றினர். காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவிலுக்கும் சென்னை ஏகாம்பரேச்சுரர் கோவிலுக்கும் திருவேட்டீச்சுரர் கோவிலுக்கும் அறநிலைக்காப்பாளராக இருந்து திறம்பெற நடத்தினர்.

தொண்டைமண்டலம் துளுவவேளாளர் பள்ளியின் அறநிலையாளராக அமர்ந்தும் அருந்தொண்டியற்றியுள்ளார்கள். பச்சையப்பன்கல்லூரி அறநிலைக்காப்பாளராகவும் இருந்தனர்

**பேரா இயற்கை**

1895-ஆம் ஆண்டில் இறைவன் திருவடி எய்தினர். இவருக்கு ஆண்பாலார் ஐவரும் பெண்பாலார் அறுவரும் தோன்றினர். இவர்தம் செயற்கரும் செயல் செய்த ஆவி என்றும் இன்புறுமாக.

பண்டைநற் றவத்தால் பம்மல் திருநகர் அதனுள் வந்து
கொண்டபேர் ஊக்கத் தாலே கல்வியும் திறனும் கூடி
மண்டல மதிக்கத் தொண்டு படியொடு படியி லாமல்
கண்டநம் விசய ரங்கர் கடவுளைச் சார்ந்தின் புற்றார்.

சிவமுருகன் தமிழ்

# தமிழ் நெடுங்கணக்கு-பெயரும் எண்ணும்

[இராவ்சாகிப், சைவப்புலவர்,
டாக்டர், தி. இரா. அண்ணாமலைப்பிள்ளை,
L.C.P.S., L.M.S.S.A. Lond.]

(செந்தமிழ்ச் செல்வி—சிலம்பு உகு பரல்-அ, பக்கம் ருகூஉ தொடர்ச்சி)

## முப்பத்துமூன்று தனிப்பெருஞ் சிறப்புவாய்ந்த எண்

### விஞ்ஞானச் சான்றுகள்—திருக்கோயில் கொடிமரமும் முப்பத்துமூன்றும்

முப்பத்துமூன்று எலும்புகளாலாகிய முதுகந்தண்டு வரிசையின் சிறப்பை, சுருங்கிய முறையில், முன்னர் மிக மிக விரிவாய் எடுத்துரைக்கும் எண்ணத்தில் ஒருவாறு சுட்டிக் காட்டினோம். அடுத்தபடியாக, நமது திருக்கோயில்களுக்கு அணிகலமாக விளங்கும் கொடிமரத்தின் அமைப்பை நம் முன்னோரது அடிபணிந்து நோக்குவாம்.

நமது உடம்பினுள்ளேயே உத்தமனைக்கண்ட நம்நாட்டுப் பெருஞ்சித்தர்கள், திருக்கோயில்களை மனித உருவத்திலேயே அமைத்தனர். தன்னையே அகழ்வாரைத் தாங்கும் நிலத்தில் வானோக்கிப் படுத்துக்கொண்டு ஆண்டவனைத் தொழுதுகொண்டிருக்கும் ஓர் அடியாரைப்போலவே திருக்கோயில் உருவமும் அமைந்துள்ளது. இது சமய நூல்கள் கூறும் உண்மை. மக்கள் உடலின் நடுவிலுள்ளது கொப்பூழ் (நாபி—உந்தி); அங்ஙனமே, திருக்கோயிலின் கண்டமத்தியிலுள்ளது கொடிமரம். (துவஜஸ் தம்பம்). மக்களின் சிரசு, கழுத்து, நெஞ்சப்பை (இருதயம்), வயிறு, இருக்கை முதலிய பல உறுப்புகள்போலவே, திருக்கோயில்களிலும், கோபுரம், கொடிமரம், மண்டபங்கள், மூலத்தானம் (கர்ப்பக்கிரகம்), பிரகாரங்கள் என்னும் பல உறுப்புக்கள் அமைந்துள்ளன. திருக்கோயிலின் முன்பாகத்தில், கொடிமரத்துக்குப் பின்னால் பலிபீடமும் நந்தியும் அமைந்திருக்கும். திருக்கோயிலின் உட்பக்கத்திலும் (கொடிமரத்துக்கும் முன்னால்) மற்றொரு நந்தி அமர்ந்து இருப்பார். சில கோயில்களில் மூன்று நந்திகளும் இருப்பதுண்டு. இவ் அமைப்பு ஒவ்வொன்றுக்கும் தத்துவப் பொருள்கள் உண்டு. திருக்கோயிலில், கொடிமரத்தருகே செல்லும்போது, அதைப் பணிவாய்க் கும்

பிட்டு, அடிப்பாகத்திலிருந்து மேற்பாகம்வரை அதன் தத்துவங்களையெல்லாம் நினைப்பூட்டிக்கொண்டு, மனதாலும் தொழுதல்வேண்டும்.

இங்ஙனம், உள்ளன்புடன் நோக்குவார்க்கு, மெய்ப்பொருள் இலங்கும் கொடிமரமானது சிறந்த திருக்காட்சியளிக்கும். கொடிமரத்தின் பல பாகங்களுக்குப் பல பெயர்களுண்டு. தரைமட்டத்துக்குக் கீழ்ப்பட்ட பாகம், நான்முகன் (பிரம்ம) பாகமென்றும், அதற்குமேல் வரிசையாய், திருமால் பாகம், உருத்திர பாகம், மகேசுர பாகம் என்றெல்லாம் பாகுபடுத்திக் கூறுவர். கொடிமரத்தின் உச்சிக்குச் சற்றுக் கீழே, மூன்று குறுக்குப்பலகை யடங்கிய இட்டிப்பலகையென்னும் பாகமும், அதில் ஒரு உபதண்டமும் தோன்றும். பொதுவாய் உச்சி முனையில் இரண்டு சிறந்த உருவங்கள் தோன்றும். கொடிமரத்தின் நேர்உச்சிச் சிகரத்தில், மூலத்தானத்தில் வீற்றிருக்கும் மூலமூர்த்தியின் ஊர்தியாகக் கருதப்படும் வாகனமும், இட்டிப் பலகையின் உச்சியில் அவரது சிறந்த ஆயுதப்பொருளும் தோன்றும். இங்ஙனமாக, பெருமாள்கோயில்களில், கருடன், சங்கு, சக்கரம் முதலிய குறிகளும், முருகன் கோயிலில், மயில், சேவல், வேலாயுதம் முதலிய பொருள்களும் காணப்படும்.

சிவன்கோயிலில், விடை (காளை—இடபம், ரிஷபம், மால் விடை), கொடிமரத்தின் நேர்உச்சியிலும், விடைக்கெதிரே திரிசூலமும், (உபதண்டத்தின் உச்சியிலும்) தோன்றும். நமது முன்னோர் காலத்தில், (வைணவர்கள் சங்கு சக்கர முத்திராதாரணம் செய்வதுபோல) சிவநெறியாளர்கள் இடபமும் சூலமும் முத்திரை தரித்து வந்தார்களென்று பௌராணிகர் கூறுவர் திருநாவுக்கரசு நாயனார் புராணத்திலும்,

“நீடுதிருத் தூங்கானை மாடத்து நிலவுகின்ற
ஆடகமே ருச்சிலையா னருளாலோர் சிவபூத
மாடொருவ ரறியாமே, வாகீசர் திருத்தோளிற்
சேடுயர்மூ விலைச்சூலஞ் சினவிடையி னுடன்சாத்த”

—சேக்கிழார்.

என்றபடி, சிவபூதமொன்று, திருநாவுக்கரசர் திருத்தோள்களில் இடபம், சூலம் ஆகிய இரண்டு குறிகளையும் இறைவன் இலச்சினையாகப் பொறித்ததென்பது தெரிகின்றது. இதைத்தான் சிவாகமங்கள் “சைவமுத்ரா தீட்சை” என்று கூறும். முன் காலத்தில், சைவசமயிகளின் தோள்களில், எப்போதும் காணும்படியான நிலையில் சுவடு உண்டாகும்படி பொறித்த இலச்சினை இன்றும் சிவன்கோயில் கொடிமரத்தின் உச்சியில்

காணப்படுவது பெருவியப்பல்லவா! விடை இலச்சினை யென்னும் திருவிளையாடற் புராணத்திலும், மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் வடக்கு வாயிற்கதவை எம்பெருமான் சொக்கநாதரே திறந்து சோழ அரசனுக்குக் காட்சியளித்து, திரும்பவும் பூட்டிக் கயற்குறியை மாற்றி (கயல் = மீன்), இடபக்குறியை இட்ட திருவிளையாடலையும் படிக்கிறோமல்லவா! ஆகவே, ஒவ்வொரு திருக்கோயிலிலும், மூலத்தான மூர்த்தியின் ஊர்தியே கொடியாக விளங்கும். கொடிமரத்தின் உச்சியிலும் அதுவே காணப்படும. இத்தகைய அமைப்புக்கு நிறைந்த மெய்ப்பொருள் உண்டு.

சமய தத்துவக் கண்கொண்டு பார்ப்பவர்க்குக் கொடிமரமானது, ஓர் அற்புத அணிகலமாய்த் திகழும். இத்தகைய விழுமிய குறிப்புக்களடங்கிய கொடிமரத்தில் அடுக்கடுக்காய்ப் பல வளையங்கள் காணப்படும். அவ்வளையங்களின் தொகை கோயிலிலுள்ள மூலமூர்த்திக்கிசைந்தாற்போல மாறுபடும் சிவாகம விதிப்படி யமைந்த சிவன்கோயில்களில், கொடிமரத்திலுள்ள வளையங்கள் முப்பத்துமூன்று என்பதை ஞானிகள் பன்முறை எடுத்துக்காட்டியுள்ளார்கள்

இவ்வாறாக, மனித உடம்பிலுள்ள முள்ளந்தண்டு முப்பத்துமூன்று எலும்புகளாலாயது என்று கண்டோம். முள்ளந்தண்டைத்தான், வீணாத்தண்டு என்று சித்தர்கள் எடுத்துக்காட்டினார்கள். திருக்கோயிலிலுள்ள கொடிமரம் முள்ளந்தண்டைக் குறிக்கிறது என்று விளக்கினோம். இம் முள்ளந்தண்டு வரிசை எங்ஙனம் முப்பத்துமூன்று எலும்புகளாலடங்கியதோ, அம்மாதிரியே கொடிமரத்து வளையங்களும் முப்பத்து மூன்றாய்க் காணப்படுமாதலின், இவ்விரண்டுக்குமுள்ள தொடர்பு பெருஞ் சால்புடைத்து என்பதில் ஐயமுண்டோ! இவை இரண்டையும், இன்னும் நுணுக்கமாய் ஒப்பிட்டு நோக்குவார்க்கு, அற்புதமான குறிப்புகள் தோன்றும். இவை, இனிவரும் விரிவுரையில் விளக்கப்படும். இது நிற்க.

## முப்பத்துமூன்று என்னும் பட்டமும் பழைய வரலாறும்

பழந்தமிழர் வரலாறு இன்னும் புதைபொருளாக இருக்கின்றது. இற்றைக்கு, ஐயாயிரம் ஆண்டுக்கு முந்தியதாகக் கருதப்படும், மொகஞ்சதரோ, ஹரப்பாவில் அகழ்ந்தெடுக்கப்பட்ட புதைபொருள்கள், இனி என்றும் அழிக்கமுடியாத சில வரலாற்றுக் குறிப்புக்களை உலகெங்கும் ஒலிபரப்பிக் கொண்டிருக்கின்றன. அங்கு நிலவிய ஓவிய எழுத்துக்களில்

தம் வாணாள் முழுவதையும் பயன்படுத்திய ஈராஸ் (Rev. Heras) பாதிரியார், ஐபீரியாவில் (Spain & Portugal) தோன்றியவர். பம்பாய் மாகாணத்தில், அங்கு நிலவும் மொழிகளோடு நிரம்பப் பழகியவர். இறுதியாகத் தென்னிந்திய மொழி (தமிழ்) யிற்றான் அவ் ஓவிய எழுத்துக்களுக்குப் பொருள் கிடைக்கின்றன என்று கண்டு வியந்து, தாம் கண்ட அதிசயத்தை வெளியிட்டார். இதை இன்னும் ஒப்புக்கொள்ள இயலாதவர்களும் உண்டு. உண்மையை மறைப்பது சில காலத்துக்கு முடியும்; உண்மையை அழிப்பது முடியாது. உண்மையே கடவுள் என்று கூறும் நம்நாட்டில், உண்மை வெளிப்படாமலிராது. உண்மையை ஆராய்ச்சியாளர்கள் உறுதிப்படுத்தும் வரையில், அவர்களுக்கு உண்மைவழியைக் காட்டும்படி இறைவனைச் சிந்திப்போமாக.

மொகஞ்சதரோ, ஹரப்பா இவ்விடங்களிற் கண்ட **சமய உண்மைகள்** எவராலும் மறுக்கமுடியாது. அங்கு, **இலிங்கம், சங்கு, யானை, புலி, சத்தி, பாம்பு, காளை, (இடபம்)** முதலியன குறித்துள்ள நாணயங்கள் கண்டெடுத்த பிறகும் அது சிவநெறிதானா என்று ஐயுறுவார்க்கு மருந்தே கிடையாது. இந்தச் சிவநெறியில் சத்திவணக்கம், திருமால் வணக்கம், முருகன் வணக்கம், நடேசர் வணக்கமெல்லாம் ஒருங்கே அமைந்துள்ளதுதான். அத்தகைய நெறி மோகஞ்சதரோவில் நிலவியது வியப்பல்ல; ஆஸ்திரேலியா, இந்தோனேசியா, இலங்கை, கிரீட்தீவு, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஈஸ்டர்தீவு எங்கும் பரவியிருந்ததுதான் மிகுந்த வியப்பைத்தரும் ஓர் செய்தி. அமெரிக்காவில் கொலரேடோ நதியருகே சிவன்கோயில் இரண்டு மைல் சுற்றளவில் இருந்ததென்று மேனாட்டார் கூறினர்; படமெடுத்துங் காட்டினர் அண்மையில் வெளிவந்த ‘மஞ்சரி’ என்னும் மாதாந்த வெளியீட்டில், அமெரிக்காவைக் கொலம்பசு கண்டு பிடிப்பதற்கு முன்னரே, அங்கே கணேசர், விஷ்ணு, சிவன், அனுமான் முதலிய மூர்த்திகள் நிறைந்த கோவில்களும், உயர்தரமான சிற்பவேலைப்பாடுகளும் மலிந்திருந்ததாக வெளியிடப்பட்டுள்ளது. இவையெல்லாம் எதைக் குறிக்கின்றது? பழங்காலத்திலேயே, அந்நாட்டில் நமது சமயநெறி பரவியிருந்ததென்பதுதானே! இச் சிவநெறியும், சிவன்கோயில்களும் இன்னும் நம் இந்தியநாட்டில் தெற்கே அதிகமாகவும், வடக்கே ஒரு சிறிது குறைவாகவும் காணப்படுகிறதென்பது யாவரும் ஒப்புக்கொள்ளவேண்டிய உண்மை.

தமிழர் பண்பாடும், தமிழ்மொழியும், தமிழ்இசையும் கடந்த இருபதாயிரம் ஆண்டுகளாக உலகில் நிலவுகின்றன

என்று, தமிழ்நாட்டின் நற்றவப்பயனால் இங்குத்தோன்றி, நமக்குக் கலங்கரைவிளக்கமாக ஒளிரும் பேராசிரியப் பெருமானார் பொதியமலையிலிருந்து ஓயாது அறைகின்றனர். ஆயினும், தமிழ்நாட்டில் கி. பி. மூன்றாம் ஆண்டுவரையிலும் (திருவள்ளுவர் காலம்உள்பட), தமிழர் பிராமி எழுத்துக்களை வழங்கிவந்தார்கள் என்று பெரும்புலவர்கள் தத்தங் கருத்துக்களைப் பல சான்றுகளோடு கூறுகின்றனர். செந்தமிழ்நாட்டுத் திருவேங்கடஈசுவரரும், கன்னிக்குமரித் தெய்வமும் தமிழ் நாட்டைப்பற்றிய வரலாறுகளில் இடர்ப்படும் சிக்கல்களைத் தெளிவுபடுத்த நமக்கு உறுதுணையாய் நின்று அருள்புரிக.

வரலாற்றுக் காலத்துக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நமது பண்டைநாகரிகம், எகிப்து, கிரீசு, இத்தாலியா, அயர்லாந்து வரையிலும் பரவியிருந்ததாக ஆராய்ச்சியாளரில் ஒரு பகுதியார் கூறுகின்றனர். இந்நாட்டுப் பழைய வரலாறுகளை, நம்நாட்டுப் பண்பாடுகளோடு ஒப்பிட்டுக் கூர்ந்து நோக்குவது சாலப் பொருத்தம். எகிப்துநாட்டில் ஆண்டவனை, ஒசிரிஸ் (Osiris) என்றும், சத்தியை, ஐசிஸ் (Isis) என்றும், குமரனை ஹோரஸ் (Horus) என்றும் கூறுவதோடு, இம்மூவர் வணக்கமும் நிரம்பியிருந்ததென்று கூறுவர். சமயக் கொள்கைகளைப் பரப்புவதற்காக, உழைத்த அந்நாட்டு முனிவர்கள், ஏழாண்டுக்குக் குறையாமல், சமயப் பள்ளிகளிற் பயின்று முதற்பட்டம் பெறுவார்கள். அதை 18° என்றழைப்பார்கள்; இதற்கு அடுத்த பட்டம், மற்றொரு ஏழாண்டுக்குக் குறையாமல் சமயக் கல்வியில் தேர்ச்சிபெற்றுக் கிடைக்கவேண்டியது; 30° பட்டம் என்று கூறுவார்கள்; இதற்கெல்லாம் பன்னாட் கழிந்து இறுதியாக, 33° என்னும்பட்டம் பெறுவார்களாம். பதினெட்டாம் படிப் (Degree) பட்டம் அன்பையும் அழகையும் பொறுத்தது ("The 18° means glowing love and beauty"); முப்பதாம் படிப்பட்டம், தெய்வத் தொழில்செய்ய உறுதி கொடுப்பது ("The 30° gives a wonderful out pouring of strength"); முப்பத்து மூன்றும்படிப் பட்டம், ஞானமும் அருளையும் அளிப்பது (wisdom with all embraing sympathy of the 33° is the dominant feature in this degree) ஆகவே, விருப்பம் (இச்சை), இயற்றல் (செயல்=கிரியை), அறிவு (ஞானம்), ஆகிய மூன்று விதமான கருவிகளையுங்கொண்டு ஆண்டவன் மன்னுயிர்களுக்காகத் தொழில் நடத்துகின்றான்; அவனுக்கு உற்றதுணையாய் நிற்கும் முனிவர்கள் தத்தம் உழைப்புக்கும் ஒழுக்கத்திற்கும் அறிவுக்கும் தகுந்தாற்போல் இறையருட்பட்டம் மூன்று விதமாய்ப் பெற்றுய்கிறார்களென்

பது விளங்கும். இத்தகைய தூய்மையான கருத்து, "திரிகரணம் ஆகவரும் இச்சை அறிவு இயற்றலால் இலயபோக அதிகாரப் பொருளாகி," என்னும் குமரகுருபர அடிகளாரின் திருவாக்கின் உட்கருத்துக் கிசைந்துள்ளதுபோலும் இம்மூன்று சத்திகளுக்கிணையாய் நின்று உதவும் முனிவர்கள் படிப்படியாய் 18°, 30°, 33° என்னும் பட்டங்கள் பெற்றனர் என்று எகிப்து நாட்டு வரலாறு கூறுமாயின், முப்பத்துமூன்று சிறப்புவாய்ந்த எண்ணென்று கூறுவது மிகையாகுமோ!

இப்பட்டங்களில், தனிப்பட்ட ஒரு வியப்பு எம்போலிகளுக்குத் தோன்றுகின்றது. தமிழ் நெடுங்கணக்கில் பதினெட்டு மெய்யெழுத்துக்கள் தான் உண்டு; முதற்பட்டமும் 18°; மெய்யெழுத்துக்கள் பதினெட்டும், உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் ஆக முப்பது எழுத்துக்கள் மெய்யும் உயிருமாகும்; இரண்டாவது பட்டம் 30°; மெய் பதினெட்டு, உயிர் பன்னிரண்டு சார்பு மூன்று ஆக எழுத்துக்கள் முப்பத்துமூன்று; மூன்றாவது பட்டம் 33°; ஆதலின், மெய், உயிர், சார்பு எழுத்துக்களின் உட்கருத்துக்களுக்கும், 18°, 30°, 33° என்ற பட்டங்களுக்கும் தத்துவத் தொடர்பு ஏதாவதிருக்குமாவென்பதை நாம் ஆழ்ந்து சிந்திக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். 33° பட்டந்தான், முனிவர்களுக்குக் கிடைக்கக்கூடிய உயர்ந்த பட்டமுமாம். சமயதீக்கை (தீட்சை) மூன்றுவகைப் பட்டதென்பதும் இங்கு நாம் நினைப்பூட்டிக்கொள்ளல்வேண்டும். எகிப்து தேசத்தில் தம் வாணாள் முற்றும் உழைத்தும், 33° பட்டம் கிடையாதவர்கள் பலர் இருந்தார்களாம். 33° பட்டம் பெற்றவர்தான் திருக்கோயில்களில் ஆசிரியராக இருந்து மக்களுக்குத் தீட்சை செய்வதற்குத் தகுதியுடையவரென்று எகிப்துதேச வரலாறு கூறுகின்றது. சைவ மடங்களில் தம்பிரான், ஒடுக்கத்தம்பிரான், மகாசந்நிதானம் என்று கூறும் பண்டார சாத்திர முறைகளுக்கு எவ்வளவு ஒப்புமை இந்த மூன்று பட்டங்களும் சுட்டுகின்றன. அடுத்து, உருத்திராக்க மகிமையையும் யாழ் அமைப்பையும் தமிழ் நெடுங்கணக்கையும் ஒப்பிட்டு நோக்கி இன்புறுவோமாக.

(தொடரும்)

# திருப்பாவை ஆராய்ச்சி

[பேராசிரியர், கா. ர. கோவிந்தராச முதலியார்.]

(சிலம்பு உங, உசஅ ஆம் பக்கத் தொடர்ச்சி.)

பாவை என்பது உவமையாகுபெயராய்ப் பெண்களை யுணர்த்த, அது, பொருளாகுபெயராய்ப் பெண்களின் செய்தியைத் தெரிவிக்கும் நூலை உணர்த்திற்று எனக்கொண்டு இருமடியாகுபெயர் என்னலாகாதோ? எனின், திருப்பாவை யின் இரண்டாம் பாசுரத்தில் 'நாமும் நம் பாவைக்கு' என்ற இடத்தில் பாவை என்பது நூலை உணர்த்தாமல் நோன்பையே உணர்த்தலின், அதனை இருமடியாகு பெயர் என்று கொள்ளுதல் இயலாததாயிருத்தலான், அதுவும் பொருந்தாது என்க.

இங்ஙனமாகிய 'திருப்பாவை' என்பது நாய்ச்சியார் அருளிய பாவை நூலுக்குக் காரணஇடுகுறிப்பெயராய் அமைந் திருக்கின்றது. இங்ஙனமே 'திருவெம்பாவை' என்பது மாணிக்க வாசக சுவாமிகள் அருளிய பாவை நூலுக்குக் காரணஇடுகுறிப் பெயராய் அமைந்திருத்தல் காண்க.

திருப்பாவையின் பாவமைதி இலக்கணமும், *அதில் திருப் பாவைக்கும், திருவெம்பாவைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை களும்.

தமிழ்மொழியிற் பாக்கள், வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நான்கு வகைப்படும். அவற்றுள், கலிப்பா வானது, ஒத்தாழிசைக்கலி, வெண்கலி, கொச்சகக்கலி என மூன்று வகையாம். கலிப்பாவின் பொதுஇலக்கணமாவன: கலிப்பாக்கள் துள்ளலோசை பெற்றுவரும் என்பதும், தன் தளையே பெற்றும், தன்தளையும் வெண்டளையும் பெற்றும், தன் தளையும் பிறதளையும் பெற்றும் வரும் என்பதும், நிரை முதலா கிய காய்ச்சீர் மிக்கு வரப்பெறும் என்பதும், நேரீற்றீரசைச் சீரும், நிரைநடுவாகிய வஞ்சியுரிச் சீரும் தம்முள் வரப்பெறா என்பதுமாகும். ஆயினும், நேரீற்றீரசைச் சீர்கள் வெண்கலி யுள்ளும், கொச்சகக் கலியுள்ளும் வருதலும், நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர் கொச்சகக்கலியுள் அருகிவருதலும் உண்டு

* பாவமைதி இலக்கணத்தில் துள்ளல் ஓசை, ஏந்திசைத் துள்ளல் அகவற்றுள்ளல், பிரிந்திசைத்துள்ளல் என மூன்று வகைப்படும். அவற் றுள், ஏந்திசைத் துள்ளலாவது, அப் பாத் தன்றளையே பெற்று வருவதாம்; அகவற்றுள்ளலாவது, வெண்டளையும் தன்தளையும் பெற்று வருவதாம்; பிரிந்திசைத் துள்ளலாவது, தன்றளையும் பிறதளைகளும் பெற்று வருவதாம் என அறிக.

என்றறிக. அன்றியும் வெண்கலியும், கொச்சகக்கலியும் முற்றும் வெண்டளையே பெற்றுவருதலும் உண்டென்று உணர்க. இவற்றுக்குச் சில உதாரணம் வருமாறு:

"முருகவிழ்தா மரைமலர்மேல் முடியிமையோர் புடைவரவே
வருசினநா தருமறைநூல் வழிபிழையா மனமுடையார்
இருவினைபோய் விழமுனியா தெதிரியகா தியையறியா
நிருமலராய் அருவினராய் நிலவுவர்சோ தியினிடையே."

இது, தன்தளையே பெற்றுவந்த கலிப்பா ஆதலின் இதன் ஓசை ஏந்திசைத் துள்ளலாம் என்க.

"செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ விடைநுழையு மதியம்போல்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே."

இது தன்தளையும் வெண்டளையும் பெற்றுவந்த கலிப்பா. இதன் ஓசை அகவற்றுள்ளலாம்.

"குடநிலைத் தண்புறவிற் கோவல ரெடுத்தார்ப்பத்
தடநிலைப் பெருந்தொழுவிற் றகையேறு மரம்பாய்ந்து
வீங்குமாறிக் கயிற்றுரீஇத் தாங்குவனத் தேறப்போய்க்
கலையினொடு முயலிரியக் கடிமுல்லை முறுவலிப்ப.

எனவாங்கு,

ஆனொடு புல்லிப் பெரும்புதன் முனையும்
கானுடைத் தவர்தேர் சென்ற வாறே."

இது, தன்றளையும் பிறதளை பலவும் கலந்துவந்த கலிப்பா ஆதலின், இதன் ஓசை பிரிந்திசைத் துள்ளலாம்.

"அரும்பொருள் வேட்கையி னுள்ளந் துரப்பப்
பிரிந்துறை சூழாதி யைய விரும்பி நீ
என்றோ ளெழுதிய தொய்யிலும் யாழநின்
மைந்துடை மார்பிற் சுணங்கு நினைத்துக்காண்
சென்றோர் முகப்பப் பொருளுங் கிடவா
தொழிந்தவ ரெல்லாரு முண்ணுதுஞ் செல்லார்
இளமையுங் காமமு மோராங்குப் பெற்றார்
வளமை விழைதக்க துண்டோ வுளநாள்
ஒரோஒகை தம்முட் டழீஇ யொரோஒகை
ஒன்றன்கூ றாடை யுடுப்பவரே யாயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை யரிதரோ
சென்ற விளமை தரற்கு."

இது, கலித்தொகையின் பதினேழாஞ் செய்யுள். இதனுள் 'உள்ளம்' என்பது முதலாகிய பல நேரீற் றிரசைச் சீர்கள் வந்துள்ளன. அன்றியும் இது, முழுதும் வெண்டளையே பெற்று வந்திருக்கின்றது.

"காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்
தாமரைக்கண் புதைத்தஞ்சித் தளர்ந்ததனோ டொழுகலான்
நீணாக நறுந்தண்டார் தயங்கப்பாய்ந் தருளினாற்
பூணாக முறத்தழீஇப் போதந்தா னகனகலம்
வருமுலை புணர்ந்தன வென்பதனா லென்றோழி
அருமழை தரல்வேண்டிற் றருகிற்கும் பெருமையளே."

இது, கலித்தொகையின் முப்பத்தொன்பதாஞ் செய்யுளாகிய கொச்சகக்கலிப்பாவின் தரவு. இதில் 'காமர்' என நேரீற்று ஈரசைச்சீர் வந்திருத்தல் காண்க. இங்ஙனமே நேரீற்று ஈரசைச் சீர்களைப் பெற்ற கலிப்பாக்கள் பலவற்றைக் கலித்தொகையிற் காணலாம்.

"செவ்விய தீவிய சொல்லி யவற்றொடு
பைய முயங்கிய வஞ்ஞான் றவையெல்லாம்
பொய்யாதல் யான்யாங் கறிகோமற் றைய
அகனகர் கொள்ளா வலர்தலைத் தந்து
பகன்முனி வெஞ்சுர முள்ள வறிந்தேன்
மகனல்லை மன்ற வினி;
செல்லினிச் சென்றுநீ செய்யும் வினைமுற்றி
அன்பற மாறியா முள்ளத் துறந்தவள்
பண்பு மறிதிரோ வென்று வருவாரை
என்றிறம் யாதும் வினவல் வினவிற்
பகலின் விளங்குநின் செம்மல் சிதையத்
தவலருஞ் செய்வினை முற்றாம லாண்டோர்
அவலம் படுதலு முண்டு."

இது, கலித்தொகையின் பத்தொன்பதாஞ் செய்யுளாகிய தாவிணைக் கொச்சகக்கலிப்பா. இந்நூலின் உரையாசிரியர் இச் செய்யுள் உரையின் ஈற்றில் "கொச்சகம் வெண்பாவாயும் வருதலானும், தாழிசையோடு தொடராது வருதலானும், இவை தரவிணைக் கொச்சகக்கலிப்பா; இரண்டும் ஒரு பொருளுதலி இவ்வாறு வரினும் கொச்சகமேயாம்," என்றெழுதியிருத்தலை ஈண்டு நோக்குக. இதில் நேரீற்று ஈரசைச் சீர்களும் வந்துள்ளன.

நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர்பெற்ற கொச்சகக்கலிப் பாக்களை வந்தவிடத்துக் காண்க. அவற்றை ஈண்டுக் காட்ட வேண்டிய தொடர்பு யாதுமின்மையின், அவை காட்டாமல் விடப்பட்டன.

"வானாளு மாமதிபோல் வெண்குடைக்கீழ் மற்றவர்தங்
கோனாகி வீற்றிருந்து கொண்டாடுஞ் செல்வறியேன்
தேனார்பூஞ் சோலைத் திருவேங் கடமலைமேல்
கானாற்றுப் பாயுங் கருத்துடையே னாவேனே."

இத்தரவுக் கொச்சகக்கலிப்பாவில் முற்றும் வெண்டளையே வந்திருத்தல் காண்க.

இனிக், கொச்சகக்கலிப்பாவானது [1]தரவுக் கொச்சகக் கலிப்பா, [2]தரவிணைக் கொச்சகக்கலிப்பா, [3]சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா [4]பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா [5]மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா என ஐந்து வகையாம்.

இவற்றுள், தரவுக் கொச்சகக்கலிப்பாவாவது, ஒரு தரவு தனியாகவாயினும், தனிச் சொல்லும் சுரிதகமுமாகிய இவற்றுடன் கூடியாயினும் வருவது. கலிப்பாக்களின் சிறுமை நான்கடி; பெருமை பாடுவோனது மனக்குறிப்பே; வரையறையில்லை.

இனித் திருப்பாவையின் பாசுரங்களை நோக்குவோம். திருப்பாவையின் பாசுரங்கள் தனிச் சொல்லும் சுரிதகமும் இன்றி வந்த தரவுக் கொச்சகக்கலிப்பாக்களே. இவற்றுள், ஒவ்வொன்றும் எட்டடி கொண்டு வந்திருக்கின்றது. இப் பாசுரங்களுள், பெரும்பாலன முழுதும் வெண்டளை வரப்பெற்றுள்ளன. சில பாசுரங்கள் கலிப்பாவிற்குரிய கலித்தளையும் வெண்டளையுங் கலந்தும், சில பாசுரங்கள் வெண்டளையும் நேரொன்றாசிரியத்தளையும் கூடியும் வரப்பெற்றிருக்கின்றன. திருப்பாவையின் பாசுரங்களில் நேரீற்று ஈரசைச் சீர்கள் பல வந்திருக்கின்றன. அவற்றிற்கு உதாரணம் வருமாறு :—

"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர் !
சீர்மல்கு மாய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள் !
கூர்வேற் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாரா யணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்."

இது, முற்றும் வெண்டளையே பெற்றுவந்த பாசுரம்.

"புள்ளுஞ் சிலம்பினகாண் புள்ளரை யன்கோயில்
வெள்ளை விளிசங்கின் பேரரவங் கேட்டிலையோ !
பிள்ளாய் ! எழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடங் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள வெழுந்தரி யென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்."

இதில், 'என்ற பேரரவம்' என்றது நேரொன்றாசிரியத்தளை; மற்றையவை வெண்டளையே.

"கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லஞ் சேறாக்கும் நற்செல்வன் தங்காய் !
வீழநின் வாசற் கடைபற்றிச்

சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய்
இனித்தா னெழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்
அனைத்தில்லத் தாரு மறிந்தேலோ ரெம்பாவாய்."

இதில், 'கடைபற்றிச் சினத்தினால்' என்றதும், 'வாய்திறவாய் இனித்தான்' என்பதுங் கலித்தளைகள் ; மற்றையவை வெண்டளையே. இப் பாசுரங்களில் நேரீற்று ஈரசைச் சீர்கள் வந்திருத்தலையும் நோக்குக.

திருப்பாவையின் பாசுரத்தொகை முப்பது. இதன் ஈற்றுப் பாசுரம் நாந்திச் செய்யுள். நாந்திச் செய்யுளாவது நூலியற்றுவார், நூலுக்கு முன்னாகவேனும் பின்னாகவேனும் தம்மைப் படர்க்கையில் வைத்து இன்னார் இயற்றியது இந் நூல் என்பது தோன்றக் கூறுவது. இங்ஙனமே ஆழ்வார்களுள், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், குலசேகரப் பெருமாள், தொண்டரடிப் பொடியாழ்வார், மதுரகவி என்னும் இவ்வறுவரும் நாந்திச் செய்யுள் கூறியிருக்கின்றனர்.

பதினெண்கீழ்க் கணக்கு நூற்களுள்,

"பண்புள்ளி நின்ற பெரியார் பயன்தெரிய
வண்புள்ளி மாறன் பொறையன் புணர்த்தியாத்த
ஐந்திணை யைம்பது மார்வத்தி னோதாதார்
செந்தமிழ் சேரா தவர்."

என 'ஐந்திணை ஐம்பது' என்னும் நூலின் முன்னும்,

"மல்லிவர்தோள் மாக்காயன் மாணாக்கன் மாநிலத்துப்
பல்லவர் நோய்நீங்கும் பாங்கினாற்—கல்லா
மறுபஞ்சத் தீர்மழைக்கை மாக்காரி யாசான்
சிறுபஞ்ச மூலஞ்செய் தான்."

எனச் 'சிறுபஞ்ச மூலம்' என்னும் நூலின் பின்னும் நாந்திச் செய்யுள் வந்திருத்தல் காண்க. இஃது ஒரு வகையான தற்சிறப்புப் பாயிரமே.

திருப்பாவையின் மற்றை இருபத்தொன்பது பாசுரங்களும் இந் நாடக நிகழ்ச்சிக்கு உரியவாகும்.

திருவெம்பாவையின் திருப்பாடல்களும் எட்டடியான் அமைந்த தரவுக் கொச்சகக்கலிப்பாக்களே. அவற்றினும் ஈரசைச் சீர்கள் பல வந்திருக்கின்றன. ஆயினும், அவை முற்றும் வெண்டளையினாலேயே அமைந்திருக்கின்றன. இப்பாவை நூலின்கண் நாந்திச் செய்யுள் இன்று திருவாசகத்தில் எங்குமே நாந்திச் செய்யுள் காணப்பட்டிலது.

# " செல்லரித்தது "

[திரு. சி. மகாலிங்கம்]

"சமணர்கள் தழைத்தோங்கிய காலமே தமிழ் நாகரிகத்தின் பொற்காலம் என்று கூறத்தக்கது," என்பர் கால்டுவெல். தமிழ்க்குமரியின் எழில் குலையாமல் காத்தனர் சமணர்கள். சமண சமயக் கொள்கைகளைத் தமிழகமறியப் பன்னூலியற்றினர். அவற்றுள் பெருங்கதையும் ஒன்று. இஃது கொங்கு வேளிரால் இயற்றப்பட்டது. கழகநூற் கடலை அறிவென்னும் கலங் கொண்டு கடந்தவர் கொங்கு வேளிர். பெருங்கதையுள் கழக நூற் கருத்துக்கள் ஆண்டாண்டு சிந்தியிருத்தல் காணலாம். "எந்நாட்டவரும் போற்றும் தென்னாட்டின் பொன்னேடாம் திருக்குறளை," எடுத்தாளாத இடமில்லை. குறளையும், வள்ளுவரையும் பல்லிடத்தும் புகழ்ந்தும் கூறுவர். அவற்றுள் சில காட்டுதும்.

நவில் தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

என்னும் குறளைப் பிரச்சோதனன் யூகியைப் பாராட்டுமிடத்து

நவில்தொறும் இனிய ஞானம் போலப்
பயில்தொறும் இனியநின் பண்புடைக் கிழமை
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் இன்புறப்
பிரிவுறு துன்பம் எம்மாட்டு எய்த. (5-7-148-51)

எனக் குறட்பொருளையன்றிச் சொற்களையும் உள்ளவாறு அமைப்பர்.

பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி யுறும்.

என்னும் குறட்பொருளை,

இழிந்த மாக்களொடு இன்பம் ஆர்தலின்
உயர்ந்த மாக்களொடு உறுபகை இனிது. (4-4-21-22)

என இவ்வடிகளில் அமைத்துள்ளார்.

ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

என்னும் குறட்பொருளை,

ஒடுங்கா மாந்தர் உள்ளம் அஞ்சப்
பாடு பெயர்ந் திடிக்கு மேடகம் போல
அகன்றுபெயர்ந் தழிக்கும் அரும்பெறல் சூழ்ச்சி. (3-1-29-31)

என்னும் இவ்வடிகளில் அமைத்துள்ளார்.

நன்றி மறப்பது நன்றன்று.

என்னும் குறட்பொருளை,

உதவி செய்தோர்க் குதவா ராயினும்
மறவி இன்மை மாண்பு டைத்து. (4-3-13-4)

என்னும் இவ்வடிகளில் செறித்துள்ளார்.

ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்.

என்னும் இக்குறளில் அமைந்துள்ள உவமையை,

பைவிரி நாகத்து ஐவாய்ப் பிறந்த
ஒலிப்புயிர் பெற்ற எலிக்கணம் போல. (1-56-273-4)

என்னுமிவ் வடிகளில் அமைத்துள்ளார்.

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

என்னு

கொள்கைக் கட்டழல் உள்ளுற மூட்டி
மாசுவினை கழித்த மாதவர் போலத்
தீயகத் திலங்கித் திறல்விடு கதிரொளி
சேடுறக் கிடந்த செம்பொன் செய்கலம். (2-19-62-5)

என்னும் அடிகளில் மாற்றி அமைத்துள்ளார்.

இதுவரையில் குறள் தொடரையும், கருத்தையும், உவமையையும் எடுத்தாண்ட இடம் சில காட்டினோம். இனித் திருக்குறளையும், வள்ளுவரையும், உரையாசிரியர் உரையையும் எடுத்தாண்ட இடங்களும், வாழ்த்துமிடங்களும் சில காட்டுதும்.

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறு மன்னன் நிலம்.

என்னும் குறளின் அகலவுரையுள் பரிமேலழகர், "மீக்கூறுதல் இவன் காக்கின்ற நாடு பசி பிணி பகை முதலியவின்றி யாவர்க்கும் பேரின்பந் தருதலின் தேவருலகினும் நன்று என்றல்," எனவெழுதுவர். இவ்வுரைப் பகுதியை,

இளையோய் தாணிழற் றங்கிய நாடே
வயிர வெல்படை வானவர் இறைவன்
ஆயிரங் குஞ்சரத் தண்ணல் காக்கும்
மீமிசை யுலகினுந் தீதிகந் தன்றெனத்
தொல்லிசை யாளர் சொல்லெடுத் தேத்த. (1-37-44-8)

என்னும் அடிகளில் அமைத்துத் " தொல்லிசையாளர் " எனப் புகழ்வர்.

மடியுளாள் மாமுகடி யென்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள்.

என்னும் குறட்பொருளை,

செய்வினை மடிந்தோர்ச் சேர்ந்துறை விலளே
மையறு தாமரை மலர்மகள் தானெனல்
வையகத் துயர்ந்தோர் வாய்மொழி யாதலின். (2-17-39-41)

எனனுமிவ்வடிகளில் செறித்து "வையகத்துயர்ந்தோர்," என்பர் வள்ளுவரை. வாய்மொழி என்பர் குறளை. பொய்யாமொழி என்னும் குறளின் வேறுபெயர் ஒப்பு நோக்கற்குரித்து.

மனத்தின் அமையா தவரை யெனைத்தொன்றுஞ்
சொல்லினாற் றேறற்பாற் றன்று.

என்னும்

தாயோர் அன்ன தகையனிர் ஆதலின்
மேயோர்க் கல்லது மெய்ப்பொருள் உணர்தல்
ஏதில் பெரும் பொருள் நீதியுள் இன்மையின்
தெரியக் கேட்கென விரியக் காட்டி. (2-9-215-8)

என்னும் அடிகளில் அமைத்துள்ளார். குறளை "ஏதில் பெரும் பொருள் நீதி" எனப் புகழ்வர்.

மண்ணரியன் மன்னர்க்குக் கண்ணென வகுத்த
நீதி நன்னூல் ஓதிய நாவினள். (4-10-13-4)

என்னுமிவ்வடிகளில் "மன்னர்க்குக் கண்ணென வகுத்த நீதி நன்னூ" லினை குறிக்கின்றார் கொங்கு வேளிர். "ஒற்றையும், உரைசான்ற நூலினையும் மன்னர்க்குக் கண்"ணென்பர் வள்ளுவர்.

ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்.

எனக் கூறுவர் வள்ளுவர். "மன்னர்க்குக் கண்ணெனவகுத்த நீதிநன்னூல்," என ஈண்டுக் கூறியது திருக்குறளையே யாதல் தேற்றம். எனவே குறளை நீதிநன்னூல் எனப் புகழ்வர்.

நல்லவை யெல்லாஅந் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு.

என்னுமிக்குறளை, "செல்வம் செயற்கு நல்லவை எல்லாம் நல்லவாம்; செல்வம் செயற்கு நல்ல எல்லாம் தீயவாம்; செல்வம் செயற்குத் தீயனவும் தீயவாம்; செல்வம் செயற்குத் தீயவும் நல்லவாம்," என அன்வயம் செய்து தம் நூலுள் அமைப்பர் கொங்குவேளிர்.

நன்றாய் வந்த ஒருபொருள் ஒருவற்கு
நன்றே யாகி நந்தினும் நந்தும்
நன்றாய் வந்த ஒருபொருள் ஒருவற்கு
அன்றாய் மற்றஃ தழுங்கினும் அழுங்கும்
தீதாய் வந்த ஒருபொருள் ஒருவற்குத்
தீதே யாகித் தீயினுந் தீயும்
தீதாய் வந்த ஒருபொருள் ஒருவற்கு
ஆசில் பெரும்பொருள் ஆகினும் ஆமெனச்
சேயவர் உரைத்ததைச் செவியிற் கேட்கும். (2-2-58-66)

இவ்வடிகளில் அக்குறளை அமைத்துள்ளார் கொங்குவேளிர். அன்றியும் வள்ளுவரைச் "சேயவர்" எனக் கூறுகின்றார்.

மண்ணகந் தழீஇ மன்னிய வூழிதொறும்
புண்ணிய வுலகிற்கும் பொலிவிற் றாமெனத்
தொன்றோங் காளர் துணியப் பட்ட
பொன்றா வியற்கைப் புகழது பெருமையும். (2-8-7-10)

என்னுமிவ்வடிகளில் 'தொன்றோங்காளர்' எனக்குறிக்கின்றார். "பொன்றா வியற்கைத்தாய புகழ்புண்ணிய உலகிற்கும் பொலிவிற்றாம் எனத் தொன்றோங்காளரால் துணியப்பட்ட தென்பர்.

நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு.

எனப் புண்ணிய உலகிற்குப் பொலிவைத் தருவது புகழ்எனக் குறித்தனர் வள்ளுவர்.

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்றில்.

எனப் புகழின் பொன்றாவியற்கையை வள்ளுவரே குறித்தனர். ஆதலின் ஈண்டுத் தொன்றோங்காளர் என்றது வள்ளுவரையே யாதல் காண்க. நிற்க,

"தொல்லிசையாளர்" "வையகத்துயர்ந்தோர்" "சேயவர்" "தொன்றோங்காளர்" என வள்ளுவரையும் "வாய்மொழி" "ஏதில் பெரும் பொருள்நீதி" "நீதி நன்னூல்" எனக் குறளினையும் பாராட்டலைக் காட்டினேம். இனி, செல்லரித்த பகுதியைக் காண்பேம்.

பெருங்கதையில் முதற்காண்டத்து முப்பத்தொரு காதையும், துறவுக்காண்டமும், காதைகளுட் சில அடிகளும், அடிகளில் ஓரிருசீர்களும் காணப்பெறவில்லை. அவற்றுள் ஓரடியில் இருசீர் காணப்பெறவில்லை அதையே யாம் ஈண்டு "செல்லரித்தது" எனக் கொண்டது.

......................ளுட்கா தொழுகிற்
பகைவர் எண்ணம் பயமில வென்னும்
நீதிப் பெருமைநூல் ஓதியும் ஓராய்
யானை வேட்கையின் சேனை நீங்கிப்
பற்று மன்னனிற் பற்றவும் பட்டனை
பொற்றொடிப் பாவையை யுற்றதுதீரக்
கொற்ற மெய்திக் கொண்டனை போந்த
மிகுதி வேந்தே புகுக என்போரும். (2-1-24-31)

என்னுமிப் பகுதி வாசவதத்தையுடன் உதயணன் சயந்தி நகரம் புக்கபோது வரவேற்றார் என்பது ஒரு சாராரின் கூற்று. இதிற் கண்ட வரலாறு:—உதயணன், முன்னுண்டமையால் நீங்கிய தெய்வயானை வேட்கையின் சேனைநீங்கித் தேடியலைந்தனன். உதயணன் உள்ளம் உள்ளும் பொருள் யானை என உணர்ந்த பகைவன் பிரச்சோதனன், அவனைச் சிறைப்படுத்த நினைந்து யந்திரயானை செய்து அதனுள் வீரரைப் புகுத்தி காட்டில் வைத்தனன். யானை என நினைந்து நெருங்கிய உதயணனை வீரர்கள் சிறைப்படுத்தினர். சிறைபட்ட உதயணன் பிரச்சோதனன் மகள் வாசவதத்தையுடன் சயந்திபுக்கான் என்பது.

உதயணன், "உள்ளத்து நிகழ்ந்த யானை வேட்கையை வெளிப்படுத்ததே பகைவன் பற்றற்குக் காரணம் எனக் கூறுகின்றனர் மக்கள். அன்றியும் நீதிப்பெருமைநூல் என ஒரு நூலினையும் குறிக்கின்றார் ஆசிரியர். முற்கூறியவாற்றான் ஆசிரியர், நீதிப் பெருமைநூல் எனக் குறிப்பதும் குறளையே யாதல் வேண்டும். மேல் இருசீரின்மையால் எக்குறள் என அறிதற்கிடம் இன்றெனலாம். ஆயினும் கீழ்க்கூறும் வரலாற்றுக் குறிப்பால் எடுத்தாண்ட குறளினை அறியலாம்.

காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்.

என்னும் குறளினையே ஆண்டனராதல் வேண்டும். உதயணன் தன்னுள்ளத்து மிக்கு நிகழ்ந்த யானைவேட்கையை வெளிப்படுத்தது ஏதிலார் பற்றற்கு ஏதுவாயிற்று. இப்பொருள் தருதற்கு ஆண்டு வேண்டிய சொற்களைப் பெய்து காட்டுவேம்.

உள்ள மூட்போரு ளுட்கா தொழுகின்
பகைவர் எண்ணம் பயமில வென்னும்
நீதிப் பெருமைநூ லோதியும் ஓராய்.

எனக் கொள்ளின், அக் குறட்கருத்து நிரம்பல் காண்க. எனவே ஆசிரியர் ஈண்டு நீதிப்பெருமைநூல் எனப் போற்றுவது திருக்குறளையே யாதல் தேற்றம்.

# தமிழ்க் காதல்

[முத்தமிழ்மணி]

பண்: கானடா] [தாளம்: ஆதி

**பல்லவி**

காதலெல் லாம்தமிழ் மீதினிலே-எந்தன் (காத)

**அனுபல்லவி**

ஆதிபரம் பொருளுண் டாயினும் அவனியில்
தாதைதமூ தாதையர் தான்வளர்த் தசெம்பயிர் (காத)

**சரணம்**


1. ஆடும் மயிலும்இசை பாடும்குயிலும்-வண்டு
நாடும் எழில்மலரும் காடும் கழனி-வெள்ளம்
ஓடும் சிற்றாறும்பிற ஓடை ஒலிகளெல்லாம்
வாடும் என்னுளத்திற்கு வளந்தரு மாயினும் (காத)

2. தேனும் கனியுங்கன்னல் தீஞ்சுவைப்பாலும்-
வானும் நிலவும்பிற வளங்களும்-மருள்விழி
மானும் குழவிகளின் மழலையும் பைங்கிளி
தானும் எனைச்சூழ்ந்த தாயினும் மனங்கவர் (காத)

3. ஆவி யுடன்கலந்த அரிவைதன் கூர்விழியை
ஏவி என்னிதயத்தில் இடம்பெற விழையினும்
நாவிற் சுவைபயக்கும் நறுநெய்யும் பிறவெல்லாம்
தாவி எனைக்கவர்ந்த வாயினும் தளர்விலாக் (காத)

4. இனமும் இசைக்குழலின் இன்பக் களஞ்சியமும்
மனமும் குளிரவரும் மைந்தர் தளர்நடையும்
வனமும் செழுங்கொடியும் வண்ணக் கலைபலவும்
கனவிலு மென்னுளத்தைக் கவர்ந்தன வாயினும் (காத)

5. ஊறும் உழலுந்துன்ப உறவினை யகற்றித்-தீஞ்
சாறும் சுவையும்நல்கிச் சார்ந்தவர் யாவர்க்கும்
பேறும் புகழும்உயர் பெட்பும் அளித்துநல்ல
வீறும் அன்பும்நாளும் வெற்றி தருமெனவே. (காத)




படவிளக்கம்

I. நெய்தலங்கானல்: 1. சூரியகுண்டம். 2. சோமகுண்டம். 3. காமவேள்கோட்டம்.
II. மருவூர்ப்பாக்கம்: 1. துறைமுகமும் பண்டசாலையும்.
III. நாளங்காடித்தோட்டம்: 1. பூதபீடிகை. 2. உவவனம்.
IV. பட்டினப்பாக்கம்: 1. அரண்மனை. 2. நருகிலைக்கோட்டம். 3. வச்சிரக்கோட்டம். 4. சீராவிச்சோலை.
5. அரண்மனைச் சேவகர் வசிக்கும் இடம்.
V. சக்கரவாளக்கோட்டம் (சுடுகாட்டுக்கோட்டம்): 1. சம்பாபதிகோயில் (உலகவறவி).

# சங்ககாலத்துக் காவிரிப்பூம்பட்டினம்

[மயிலை, சீனி. வேங்கடசாமி.]

கடைச்சங்க காலத்திலே, அஃதாவது கி. பி. 300-க்கு முன்னே, சோழநாட்டின் துறைமுகப் பட்டினமாகவும் தலைநகரமாகவும் இருந்தது **காவிரிப்பூம்பட்டினம்**. குடிவளம் செழித்துப் பொருள்வளம் பெருகி நாகரிகத்தில் சிறந்து உலகமெங்கும் புகழ்பெற்று விளங்கிய காவிரிப்பூம்பட்டினம், **புகார்ப்பட்டினம்** என்றும் **புகார்** என்றும் **பூம்புகார்** என்றும் பெயர் பெற்றிருந்தது. காவிரியாறு கடலில் கூடுகிற இடமாகலின் இந்நகரம் புகார் என்றும் பூம்புகார் என்றும் பெயர் பெற்றது.

"தேறுநீர்ப் புணரியொடு யாறுதலை மணக்கும்
மலியோதத்து ஒலிகூடல்"

என்று, இந்த இடத்தைப் பட்டினப்பாலை (97-98) கூறுகிறது. இதற்கு உரை கூறுகிற நச்சினார்க்கினியர், "தெளிந்த கடலில் திரையோடே காவிரி தலைகரக்கும் ஓதத்தினால் ஒலி மலிந்த **புகார்முகம்**," என்று விளக்குகிறார். எனவே காவிரியாறு கடலில் புகுகிற இடமாகலின் இதற்குப் புகார் என்று பெயர் வந்தது என்பது தெளிவாகிறது.

காவிரிப்பூம்பட்டினத்தை டாலமி என்னும் யவன ஆசிரியர் **சபரிஸ்** (Chabaris) என்று கூறுகிறார். பெரிப்ளஸ் என்னும் கிரேக்க நூலாசிரியர் இந்நகரத்தை கமர (Kamara) என்கிறார். இந்த ஆசிரியர்கள் கி. பி. 2-ஆம் நூற்றாண்டுக்கு முன்பு இருந்தவர்கள். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்துக்கு வந்த சீன நாட்டுப் பௌத்தராகிய யுவாங்-சுவாங் என்பார் இந்நகரத்தை சரித்ரபுரம் என்று கூறுகிறார். பாலி மொழியில் எழுதப்பட்ட பழைய பௌத்த நூல்களிலே காவிரிப்பூம்பட்டினம் **கவீரபட்டினம்** என்று கூறப்பட்டுள்ளது.

கி. பி. 2-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே இந்த நகரம், கடல் கொந்தளிப்பினாலும் வெள்ளப் பெருக்கினாலும் பெருஞ் சேதத்திற்குள்ளாயிற்று. இவ்வெள்ளச் சேதத்திற்குப் பிறகு, மீண்டும் இந்நகரம் பெருமையுடனும் செல்வச் சிறப்புடனும் விளங்கிற்று. முற்காலத்திலே உலகம் போற்றும் பெருமை வாய்ந்திருந்த இப் பட்டினம் கி. பி. 15-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு பெருமை இழந்து நாளடைவில் வளம் குன்றி இப்போது சிறு குக்கிராமமாக இருக்கிறது. சங்ககாலத்திலும் அதற்குப் பிற்பட்ட காலத்திலும், மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும்

உடையதாய், குடிவளம் பெருகிப் பொருள்வளம் செழித்து நாக ரிகத்துக்கு உறைவிடமாக விளங்கிய காவிரிப்பூம்பட்டினம், இப்போது இருக்கும்இடம் தெரியாமல் குக்கிராமமாகி ஒதுக் குண்டிருக்கிறது. பண்டைக் காலத்திலே, இந்தப் பட்டினத் தில் சோழ மன்னர்களும், பெருங்குடி மக்களும் பெருமையுடன் வாழ்ந்திருந்தார்கள். கடைச்சங்க காலத்திலே, கி. பி. இரண் டாம் நூற்றாண்டிலே இருந்த சிலப்பதிகாரக் காவியத் தலைவ ராகிய கோவலனும் கண்ணகியாரும் இந்தப் பட்டினத்திலே வாழ்ந்திருந்தார்கள். ஆடல் பாடல்களில் பேர்போன மாதவி என்னும் கலைச்செல்வி வாழ்ந்திருந்த இடமும் இப்பட்டினமே. மாதவியின் மகளும், மணிமேகலைக் காவியத்தின் தலைவியுமாகிய மணிமேகலையார் பிறந்து வாழ்ந்த இடமும் இந்நகரமே. சிலப் பதிகாரம், மணிமேகலை என்னும் இருபெருங் காவியங்களின் தலைவர்கள் பிறந்து வாழ்ந்த காவிரிப்பூம்பட்டினம் சிறந்த நகர மாகத்தானே இருக்கவேண்டும்? ஆகவே, காவிரிப்பூம்பட்டி னத்தின் பண்டைய சிறப்பை ஆராய்வோம். அஃதாவது, கி. பி. 300 ஆண்டுக்கு முன்பு இருந்த பட்டினம் எவ்வாறு அமைந் திருந்தது, தரையமைப்பு (Plan) எவ்வாறிருந்தது, தெருக் களும் முக்கிய கட்டிடங்களும் கோயில்களும் பூந்தோட்டங் களும் துறைமுகமும் எவ்வாறு அமைந்திருந்தன என்பதை ஆராய்ந்து பார்ப்போம். இந்த ஆராய்ச்சிக்குப் பேருதவி யாய் இருப்பவை சிலப்பதிகாரம், மணிமேகலை, பட்டினப்பாலை, புறநானூறு, அகநானூறு, நற்றிணை ஆகிய இந்நூல்களேயாம். இந்நூல்களின் துணைகொண்டு புகார்ப்பட்டினம் எவ்வாறு அமைந்திருந்தது என்பதைக் காண்போம்.

இடம்:—காவிரியாறு கடலுடன் கலக்கிற புகார்முகத்தின் வடகரையிலே காவிரிப்பூம்பட்டினம் அமைந்திருந்தது. ஆகவே இப் பட்டினத்தின் தெற்கெல்லை காவிரி ஆறும், கிழக்கெல்லை வங்காளக்குடாக்கடலும் ஆக இருந்தன. தூய காற்று வீசுகிற கடற்கரையோரத்திலே இரண்டு நீர்நிலைகளை எல்லையாகப் பெற் றிருந்த காவிரிப்பூம்பட்டினம், கிழக்கு மேற்காக நீண்ட சதுர அமைப்புடையதாக இருந்தது. மணல்பரந்த கடற்கரைப் பக்கம் **நெய்தலங்கானல்** என்று பெயர் பெற்றிருந்தது. நெய் தலங்கானலுக்கு மேற்கே **மருவூர்ப்பாக்கமும்**, அதற்கு மேற்கே நாளங்காடியாகிய மரச்சோலையுள்ள இடைநிலமும், அதற்கு மேற்கே **பட்டினப்பாக்கமும்** இருந்தன. துறைமுகமும் பண்ட சாலையும் மருவூர்ப்பாக்கத்திற்குத் தெற்கே காவிரியாற்றின் வட கரையிலே இருந்தன. (படம் காண்க) இப்பகுதிகளைத் தனித் தனியே ஆராயலாம்.

**நெய்தலங்கானல் :**—இது கடற்கரையைச் சார்ந்த மணல் பரந்த இடம் (படம் காண்க) இங்குச் சோமகுண்டம், சூரிய குண்டம் என்னும் இரண்டு குளங்களும் காமவேள் கோட்டமும் இருந்தன. இக்குளங்களில் மூழ்கிக் குளித்துக் காமவேளை வழி படும் மகளிர், இம்மையில் கணவரைப்பெற்று இன்புற்றுப் பின்னர் மறுமையிலும் போகபூமியிற் சென்று பிறப்பார்கள் என்று அக்காலத்து மக்கள் நம்பியிருந்தனர்.

> "கடலொடு காவிரி சென்றலைக்கு முன்றில்
> மடலவிழ் நெய்தலங் கானல் தடமுள
> சோமகுண்டம் சூரிய குண்டம் துறைமூழ்கிக்
> காமவேள் கோட்டம் தொழுதார் கணவரொடு
> தாமின் புறுவர் உலகத்துத் தையலார்
> போகம்செய் பூமியிலும் போய்ப்பி றப்பர்." —சிலம்பு: 9, 57-62

இவ்விரண்டு குளங்களை இருகாமத்து இணைஏரி என்று பட்டினப்பாலை கூறுகிறது. இதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர், "இம்மையிலும் மறுமையிலும் உண்டாகிய காம இன்பத்தினைக் கொடுத்தற்குரிய இணைந்த ஏரிகள்" என்று உரை எழுதுகிறார். மேலும், வளகாமரேரி வணிகாமரேரி என்றும் சங்கிராம காமம் வணிக்கிராம காமம் என்றும் பெயர்கள் இவ் வேரிகளுக்கு இருந்தன என்றும் கூறுகிறார் காவிரிப்பூம்பட்டினத்திலே ஆண்டுதோறும் நடைபெறும் இந்திரவிழாவின் இறுதிநாளிலே நகரமக்கள் இங்கு வந்து கடலில் நீராடி இன்பமாகக் காலங் கழிப்பர். கோவலனும் மாதவியும் கடலாட்டுக் காண்பதற்காக இவ்விடம் வந்து, புன்னைமர நிழலிலே கூடாரம் அமைத்து, அதில் அமர்ந்து கானல்வரி பாடினார்கள் என்றும், அப்போது கோவலன் மாதவியை ஐயுற்று அவளைப் பிரிந்து சென்றான் என்றும் சிலப்பதிகாரம் கூறுகிறது.

(சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி என்னும் பெயருள்ள ஒரு சோழ அரசன் பெயர் சங்க நூல்களில் காணப் படுகிறது. இந்த அரசனுக்கு நெய்தலங்கானல் என்னும் அடைமொழி ஏன் வந்தது என்று விளங்கவில்லை.)

**மருவூர்ப்பாக்கம் :**—நெய்தலங்கானலுக்கு மேற்கே மருவூர்ப் பாக்கம் இருந்தது. இங்குத் துணிநெய்வோர், நவதானியம் விற்போர், அப்பம் விற்போர், ஆட்டு வணிகர், கன்னார், வண்ணார், குயவர், தட்டார், தோல் வேலை செய்வோர், மீன் பிடிப்போர், நால்வகைச் சேனையைச் சேர்ந்த போர் வீரர்கள், வெளி நாடுகளில் இருந்து கப்பல் ஓட்டிவந்த யவனர் முதலிய கடலோடிகள் முதலியோர் வசித்திருந்தனர் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. (சிலம்பு 5—9-39, 6—130-150.)

"மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம்"

என்று பட்டினப்பாலை கூறுவது இந்த மருவூர்ப்பாக்கத்தைத் தான். மருவூர்ப்பாக்கத்திற்கு மருங்கூர்ப்பட்டினம் என்றும் பெயர் வழங்கியதுபோலும்.

"திருவுடை வியனகர் வருவிருந் தயர்மார்
பொற்றொடி மகளிர் புறங்கடை யுகுத்த
கொக்குகிர் நிமிரல் மாந்தி, எற்பட
அகலங் காடி யசைநிழல் குவித்த
பச்சிறாக் கவர்ந்த பசுங்கண் காக்கை
தூங்கல் வங்கத்துக் கூம்பிற் சேக்கும்
மருங்கூர்ப் பட்டினம்"

என்று நக்கீரர் நற்றிணையில் (258) கூறுவது இந்த மருவூர்ப் பாக்கமேயாம். மேலும், நக்கீரர் அகம் 227-ஆவது செய்யுளில்,

"விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்
இருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினத்து
எல்லுமிழ் ஆவணம்"

என்றும் கூறுகிறார். எனவே, காவிரிப்பூம்பட்டினத்தின் கீழ்ப் பகுதியாகிய மருவூர்ப்பாக்கமும் நக்கீரர் கூறுகிற மருங்கூர்ப் பட்டினமும் ஒன்றே என்பது விளங்குகிறது. (படம் காண்க) மருவூர்ப்பாக்கத்தின் தெற்கில் காவிரிக்கரை ஓரத்தில் துறை முகமும் பண்டசாலையும் இருந்தன. இவற்றைப்பற்றிப் பின்னர் விளக்குவாம்.

**நாளங்காடி:**—மருவூர்ப்பாக்கத்துக்கு மேற்கே மரங்கள் அடர்ந்த இடைநிலம் இருந்தது. மருவூர்ப்பாக்கத்தில் செல்வச் சீமான்களும் பெருங்குடி மக்களும் வாழவில்லை. தொழிலாளர்களும் நடுத்தரச் செல்வம் உள்ளவர்களும் மற்றவர்களும் வாழ்ந்துவந்தனர். இந்த மரச்சோலையில் நாள்அங்காடி இருந்தது. இந்த நாளங்காடிச் சோலை மருவூர்ப்பாக்கத்துக்கும் பட்டினப்பாக்கத்துக்கும் இடைநடுவில் இருந்தது. (படம் காண்க) இந்த அங்காடியில், மருவூர்ப்பாக்கத்தில் வாழ்ந்தவர்களும் பட்டினப்பாக்கத்தில் வாழ்ந்தவர்களும் தமக்கு வேண்டிய பொருள்களை வாங்கினார்கள்.

"இருபெரு வேந்தர் முனையிடம் போல
இருபாற் பகுதியின் இடைநில மாகிய
கடைகால் யாத்த மிடைமரச் சோலைக்
கொடுப்போர் ஓதையும் கொள்வோர் ஓதையும்
நடுக்கின்றி நிலைஇய நாளங் காடி"

என்று சிலம்பு (5: 59—63) கூறுகிறது.

"பெரிய வேந்தர்இருவர் போர்குறித்து வந்துவிட்ட பாசறையிருப்புக்கு நடுப்பட்ட நிலம் போர்க்களம் ஆனாற் போல, முற்கூறிய மருவூர்ப்பாக்கமும் பட்டினப்பாக்கமும் என இரண்டு கூறுபட்ட ஊர்க்கு நடுப்பட்ட பொதுநிலமாகிய நாளங்காடி; அஃது எத்தன்மையதாகிய நாளங்காடி எனின், நிரைபடச் செறிந்த சோலையின் மரங்களிற் கால்களே தூணாகக் கட்டப்பட்ட கடைகளையுடைய கொடுப்போர் கொள்வோர் இடையறாது நிலைபெற்ற நாளங்காடி; எனக," எனபது அடியார்க்கு நல்லார் உரை. (இந்நாளங்காடியின் நடு இடத்திலே காவல் பூதத்திற்குப் பலிபீடம் அமைந்திருந்தது. இதைப் பற்றிப் பின்னர்க் கூறலாம்.)

**பட்டினப்பாக்கம்**:—நாளங்காடிக்கு மேற்கே பட்டினப் பாக்கம் இருந்தது. இதுதான் காவிரிப்பூம்பட்டினத்தின் முக்கிய பகுதி. ஏனென்றால், இங்குத்தான் சோழமன்னர் அரண் மனையும் பெருங்குடி மக்களின் மாளிகைகளும் முக்கியமான கோயில்களும் மண்டபங்களும் நாடகசாலைகளும், ஆடரங்கு களும் இருந்தன.

"மகர நெற்றி வான்தோய் புரிசைச்
சிகரந் தோன்றாச் சேணுயர் நல்லில்
புகாஅர் நன் னாடு."

என்று பரணர் (அகம்: 181), புகார்நகரம உயர்ந்தமதில் சுவர்களையுடைய கோட்டைக்குள் இருந்ததாகக் கூறுகிறார். இவர் கூறுகிற புகார்நகரம் பட்டினப்பாக்கமாகும். மணி மேகலைக் காவியத்தில் காணப்படுகிற சில குறிப்புகளைக்கொண்டு நுட்பமாக ஆராய்ந்தால் இது விளங்கும். சீத்தலைச் சாத்தனாரும், தாம் இயற்றிய மணிமேகலையில் புகார்நகரத்திற்குக் கோட்டை மதிலும் அகழியும் இருந்ததாகக் கூறுகிறார். இந்தப் பட்டினப்பாக்கம், கோட்டைமதிலையும் அகழியையும் உடையதாய் உயரமாக அமைந்த அரண்மனையையும் அதற்கு அருகில் தருநிலைக்கோட்டம், வச்சிரக்கோட்டம் என்னும் இரண்டு கோயில்களையுமுடையதாய் ஓர் அழகிய மங்கைபோல விளங்கிற்று என்று கூறுகிறார்.

"புலவரை யிறந்த புகார்எனும் பூங்கொடி
பன்மலர் சிறந்த நன்னீர் அகழிப்
புள்ளொலி சிறந்த தெள்ளரிச் சிலம்படி
ஞாயில் இஞ்சி நகைமணி மேகலை
வாயின்மருங் கியன்ற வான்பணைத் தோளி
தருநிலை வச்சிரம் எனவிரு கோட்டம்

எதிரெதிர் ஓங்கிய கதிரிள வனமுலை
ஆர்புனை வேந்தர்க்குப் பேரள வியற்றி
யூழி எண்ணி நீடுநின் றோங்கிய
ஒருபெருங் கோயில் திருமுக வாட்டி." —மணி. 5, 109-118.

(பட்டினப்பாக்கத்தின் அமைப்பைப் படத்தில் காண்க.) அரண்மனைக்கு அருகில் இருந்த வீதிகளிலே அரண்மனை அலுவலாளர்களும், அரண்மனை ஊழியரும், குதிரைப்படைத்தலைவர், யானைப்படைத்தலைவர், தோப்படைத்தலைவர், காலாட்படைத் தலைவர் முதலியவர்களும் வசித்திருந்தனர். இங்கே கோவியன் வீதியும், கொடித்தேர்வீதியும், பீடிகைத்தெருவும், ஏனைய தெருக்களும் இருந்தன. பெருங்குடி வணிகர், பெருநிலக் கிழவர், முத்து விற்போர், சங்கவளை விற்போர் முதலியோர் இப்பட்டினத்தில் வசித்திருந்தனர். கோவலன் கண்ணகியும் இவர்களின் பெற்றோரான மாசாத்துவான், மாநாய்கன் முதலியோரும் இங்கே வசித்துவந்தனர். மணிமேகலையும் மாதவியும் வசித்த இடமும் இதுவே. பட்டினப்பாக்கத்தின் சிறப்பைச் சிலம்பு 5-ஆம் காதை 40—58 அடிகளாலும் இவ்வடிகளுக்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையினாலும் அறியலாம்.

சுடுகாடு :—காவிரிப்பூம்பட்டினத்தை யடுத்து சுடுகாடு இருந்தது. இதற்குச் சுடுகாட்டுக்கோட்டம் என்றும், சக்கரவாளக்கோட்டம் என்றும் பெயர். இது நாளங்காடிச் சோலைக்கு வடக்கேயிருநதது. (படம் காண்க.) இங்கே துர்க்கை கோயிலும், வாகை மன்றம், வெள்ளில் மன்றம், இரத்தி மன்றம், வன்னி மன்றம், வெள்ளிடை மன்றம் ஆகிய மன்றங்களும் இருந்தன என்று மணிமேகலை கூறுகிறது. (மணி. 6-ஆம் காதை 37—97.)

துறைமுகம் :—காவிரி ஆறு கடலுடன் கலக்கிற புகார் முகத்தில் இருந்தபடியினாலே வெளிநாட்டு நாவாய்களும் மரக் கலங்களும் இத் துறைமுகத்தில் வந்து தங்கின. புகார்த்துறை முகம் ஆழமும் அகலமும் உடையதாய் இருந்தது ஆகையினாலே, பெரிய நாவாய்கள் பாய்களைக் களையாமலே துறைமுகத்தில் வந்து நங்கூரம் பாய்ச்சி நின்றன.

"...... ....................கூம்பொடு
மீசைப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது
புகாஅர் புகுந்த பெருங்கலம்"

என்று புறப்பாட்டு (30) கூறுகிறது.

"கூம்புடனே மேற் பூரிக்கப்பட்ட பாயை மாற்றுமல் அதன்மேற் பாரத்தையும் பறியாமல் ஆற்றுமுகத்துப் புகுந்த

பெரிய மரக்கலம்,'' என்பது இதன் பழைய உரை. மேலும், "பாய் களையாது பரந் தோண்டாது என்றதனால், துறை நன்மை கூறியவாறும்,'' என்று விளக்கம் கூறுகிறது இப்பழைய உரை.

"வெளில்இளக்கும் களிறு போலத்
தீம்புகார்த் திரைமுன் றுறைத்
தூங்கு நாவாய் துவன்றிருக்கை
மிசைக்கூம்பின் அசைக்கொடியும்''

என்று பட்டினப்பாலை (172—175) கூறுகிறது.

"அசையாத கம்பத்தினை யசைக்கும் யானைபோல, கட்கினிதாகிய புகாரிடத்துத் திரையினையுடைய துறையின் முன்னே நிறைந்த இருப்பினையுடைய அசைகின்ற நாவாயின்மேல் நட்ட பாய்மரத்தின் மேலெடுத்த விரும்புதலையுடைய கொடிகள்'' என்று நச்சினார்க்கினியர் இதற்கு எழுதுகிறார்.

துறைமுகத்தில் நடைபெறுகிற ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களை வைக்கும் பண்டசாலை துறைமுகத்திற்கு அருகிலே மருவூர்ப்பாக்கத்தில் இருந்தது. (படம் காண்க.) சுங்கத்திர்வையாளர், சுங்கம்(வரி)பெற்ற பொருள்களுக்குச் சோழஅரசனுடைய அடையாளமாகிய புலியைப் பொறித்தனர் என்று பட்டினப்பாலை கூறுகிறது. அயல்நாடுகளிலிருந்து நாவாய் ஓட்டிவந்த மாலுமிகள் துறைமுகத்திற்கு அருகிலேயிருந்த மருவூர்ப்பாக்கத்தில் தங்கியிருந்தனர்.

இனி இந்நகரத்தில் இருந்த கோயில்கள் கோட்டங்கள் பூஞ்சோலைகள் முதலிய பொது இடங்களை ஆராய்வோம்.

**கோயில்கள் :**—சோழ அரசரும், செல்வப் பிரபுக்களும், பெருங்குடி மக்களும் வசித்த பட்டினப்பாக்கத்தில் வச்சிரக் கோட்டம், ஐராவதக்கோட்டம், தருநிலைக்கோட்டம், பிறவா யாக்கைப் பெரியோன் (சிவன்) கோயில், முருகவேள் கோட்டம், பலதேவன் கோயில், கண்ணன் கோயில், உச்சிக்கிழான் (சூரியன்) கோட்டம், நிலாக்கோட்டம், அருகன் கோயில், பௌத்தக் கோயில் முதலிய கோயில்கள இருந்தன. இவைகளைப் பற்றிச் சிலப்பதிகாரத்தில் காணலாம். (சிலம்பு. 5 : 141-172, 9-9-15, 10-9-25.)

இக்கோயில்களைத் தவிர சிறுதெய்வங்களுக்கு ஐந்து மன்றங்கள் இருந்தன. இதனை,

"அமராபதிகாத்து அமரனிற் பெற்றுத்
தமரிற் றந்து தகைசால் சிறப்பிற்
பொய்வகை யின்றிப் பூமியிற் புணர்த்த
ஐவகை மன்றத்து அமைதியும் காண்குதும்.''

என்னும் சிலம்பு, கடலாடு காதையடிகளால் அறியலாம். இந்த ஐந்து மன்றங்களாவன.

**வெள்ளிடைமன்றம்** :—இம்மன்றத்தில் இருந்த தெய்வத்தின் சிறப்பு என்னவென்றால், இது கள்வரைத் தண்டித்துவந்தது. பிறர்பொருளைக் களவாடினவர்களின் தலையில், களவாடிய பொருளைவைத்து அழுத்திக் கழுத்துக் கடுக்க ஊர்முழுவதும் சுற்றிவரச் செய்யுமாம்.

**இலஞ்சிமன்றம்** :—இம்மன்றத்தின் அருகில் ஒரு மடு (ஓடை) இருந்தது. இதில் மூழ்கி இம்மன்றத்துத் தெய்வத்தை வழிபட்டவருக்குக் குட்டம், ஊமை, செவிடு, கூன் முதலியவை நீங்கிவிடுமாம்.

**நெடுங்கல் மன்றம்** :—இம்மன்றத்தில் வழிபட்டவருடைய பைத்தியம், பாம்புக்கடி விஷம், பேய்பிடித்த துன்பம், நஞ்சு உண்ட தீங்கு முதலியவை நீங்கிவிடுமாம்.

**பூத சதுக்கம்** :—இது நாற்சந்தியில் இருந்தது போலும். இங்கிருந்த பூதம், கூடாவொழுக்கம் உள்ள துறவிகள், பிறர்மனை விரும்பும் துச்சாரிகள், கற்பு நெறிதவறிய பெண்டிர், அரசனை வஞ்சிக்கும் அமைச்சர், நீதிமன்றத்தில் பொய்ச்சான்று கூறும் நெறியற்றோர் ஆகியவர்களைக் கயிற்றினால் கட்டி நிலத்தில் ஓங்கி அறைந்து கொல்லுமாம்.

**பாவைமன்றம்**:—இம்மன்றத்தில் இருந்த தெய்வம், அரசன் நீதிதவறி நடந்தாலும், நீதிமன்றத்தில் நீதிபதிகள் நீதி தவறித் தீர்ப்புக் கூறினாலும் கண்ணீர் உகுத்து அழுது இந்த அநீதிகளை உலகத்தாருக்கு வெளிப்படுத்துமாம்.

இந்த ஐந்து மன்றங்களைப் பற்றிச் சிலம்பு. 5-ஆம் காதை 111-140 அடிகளாலும், இவ்வடிகளுக்கு அடியார்க்கு நல்லார் இயற்றிய உரையினாலும் அறியலாம். இவையன்றியும் வேறு சில கோயில்களும் இருந்தன. அவையாவன,

**பூதபீடிகை** :—இது நாளங்காடித் தோட்டத்தின் நடுவில் இருந்தது. (படம் காண்க) இந்தப் பீடிகை இங்கு அமைக்கப்பட்ட காரணத்தைச் சிலம்பு 6-ஆவது காதை 8-13 வரிகளில் காண்க; இந்திரவிழா தொடங்குவதற்கு முன்பு மறக்குடி மகளிரும் போர்வீரர்களும் இப்பீடிகைக்குச் சிறப்புச் செய்தனர். சிலம்பு 5-ஆம் காதை 65-88 அடிகளில் காண்க.

**சம்பாபதி கோயில்**:—இது சுடுகாட்டுக் கோட்டத்துக்கு அருகில் இருந்தது. (படம் காண்க.) இதற்கு அருகில் உவவனம் என்னும் பூந்தோட்டம் இருந்தது. சம்பாபதி கோயிலுக்குக்

குச்சரக்குடிகை என்றும் முதியாள் கோட்டம் என்றும் பெயர். இக்கோயிலின் ஒருபுறத்தில் உலகவறவி என்னும் இடம் இருந்தது. உலகவறவியில் குருடர், முடவர், நோயாளிகள், பிச்சைக்காரர்கள் முதலிய ஏழை எளியவர்கள் இருந்தனர். சம்பாபதிக் கோயிலில் சம்பாபதியம்மன் உருவம் வழிபடப்பட்டது. இது பௌத்தத் தெய்வம் இக்கோயிலிலேயே கந்திற்பாவை என்னும் தெய்வமும் வழிபடப்பட்டது. மணிமேகலை இக் கோயிலில் தங்கி இங்கிருந்த ஏழை எளியவருக்கு உணவு கொடுத்து உதவினாள். மணிமேகலையைக் காதலித்த உதயகுமாரன் கந்தர்வனால் கொலையுண்டதும் இவ்விடந்தான். (இப்போதுள்ள காவிரிப்பூம்பட்டினம் என்னும் கிராமத்திற்கு அருகில் மருவதூர் என்னும் இடத்தில் சம்பாபதி கோயில் இப்போதும் இருக்கிறது என்று தொல்பொருட்கலை (ஆர்க்கியாலஜி) அறிக்கை கூறுகிறது. இப்போதைய மருவதூர், பண்டைய மருவூர்ப்பாக்கமாக இருக்குமோ? இப்போதைய சம்பாபதிகோயில் பண்டைய சம்பாபதி கோயில் தானோ?)

சக்கரவாளக் கோட்டம என்னும் சுடுகாட்டுக்கோட்டத்தில் துர்க்கை அமமன் கோயிலும் வேறு சில மன்றங்களும் இருந்தன என்பதை முன்னரே கூறினோம்.

**சிறைக்கோட்டம்:**—இது அரசாங்கத்துக் குற்றவாளிகளை அடைத்துச் சிறைவைத்திருந்த சிறைச்சாலை. இது பட்டினப் பாக்கத்தில் இருந்ததா, மருவூர்ப்பாக்கத்தில் இருந்ததா என்று திட்டமாகத் தெரியவில்லை. மணிமேகலையார் வேண்டுகோளின்படி இச் சிறைச்சாலையைப் பௌத்த மடமாகச் சோழமன்னன் செய்து கொடுத்தான் என்று மணிமேகலை நூலினால் அறியப்படுகிறது மணி. 19-ஆம் காதை. 130-162 அடிகள் காண்க.

**பட்டிமண்டபம்:**—இது பட்டினப்பாக்கத்தில் சோழ மன்னன் அரண்மனையில் இருந்த கட்டிடம். இந்த மண்டபத்தில் மதவாதிகள் கூடித் தத்தம் மத தத்துவங்களைக் குறித்துச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

> "ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்
> பட்டி மண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்
> பற்றா மாக்கள் தம்முடன் ஆயினும்
> செற்றமும் கலாமும் செய்யா தகலுமின்."

என்று இந்திரவிழாத் தொடக்கத்தில் அரசன் முரசறைவித்தான் என்று மணி. 2-ஆம் காதை கூறுகிறது. மகதநாட்டு மன்னன், சோழனுக்கு இந்த மண்டபத்தைக் கையுறையாகக் கொடுத்தான் என்று சிலம்பு 5-ஆம் காதை கூறுகிறது.

" மகதநன் னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைப் புறத்துக் கொடுத்த பட்டி மண்டபம்,"

என்று கூறுவது காண்க. பட்டிமண்டபம் என்பதற்கு ஓலக்க மண்டபம் என்று அரும்பத உரையாசிரியர் கூறுகிறார். "பட்டி மண்டபம்—வித்தியா மண்டபம்; ஓலக்க மண்டபமு மென்க" என்று அடியார்க்கு நல்லார் உரை கூறுகிறார்.

இனி இங்கிருந்த பூங்காவனங்களை ஆராயலாம்.

**இலவந்திகை :**—இதற்கு நீராவிச்சோலை என்றும் பெயர் உண்டு. இஃது அரண்மனையைச் சேர்ந்த பூங்காவனம். அரச குடும்பத்தினர் மட்டும் இங்குச் செல்ல உரிமையுடையவர். இது, பட்டினப்பாக்கத்தில் காவிரி ஆற்றங்கரை ஓரமாக அரண் மனைக்கு அருகில் இருந்தது. (படம் காண்க.)

" கலையி லாளன் காமர் வேனிலொடு
மலைய மாருதம் மன்னவற் கிறுக்கும்
பன்மலர் அடுக்கிய நன்மரப் பந்தர்
இலவந் திகையின் எயிற்புறம் போகி."

என்று சிலம்பு கூறுகிறது. இச்சோலையின் காட்சிகளைச் சீத் தலைச் சாத்தனார் மணிமேகலையில் (19-ஆம் காதை) விரிவாகக் கூறுகிறார்.

**உவவனம் :**—இது நாளங்காடித் தோட்டத்தின் மேற்கில் பட்டினப்பாக்கத்துக் கோட்டை மதில் ஓரத்தில் இருந்தது. (படம் காண்க.) இதற்கு வடக்கே குச்சரக்குடிகை என்னும் சம்பாபதி கோயில் இருந்தது. இந்தப் பூங்காவனம பௌத்தர் களுக்குரியது. இங்குப் புத்தபகவானுடைய பாத பீடிகை அமைந்த பளிங்குஅறை மண்டபம் இருந்தது. இந்தப் பூஞ் சோலையில் பூக் கொய்வதற்காக மணிமேகலையார் சுதமதியுடன் சென்றார். உதயகுமாரன் மணிமேகலையைப் பின் தொடர்ந்து சென்று சுதமதியுடன் உரையாடிய இடமும் இதுவே. இப் பூஞ் சோலையின் சிறப்பைச் சீத்தலைச்சாத்தனார் மணிமேகலை நூலிலே நன்கு விளக்குகிறார். (3-ஆம் காதை 160—170-, 4-ஆம் காதை 1—26 )

**உய்யானம் :**—இது பட்டினப்பாக்கத்தில் இருந்த பூத சதுக்கத்தின் அருகில் இருந்ததுபோலும். இதனை,

" கைபெய் பாசத்துப் பூதங்காக்கு மென்று
உய்யா னத்திடை யுணர்ந்தோர் செல்லார்."

என்று மணிமேகலை நூல் கூறுவதனாலே அறியலாம்.

**சம்பாதிவனம், கவேரவனம்** :—இவ்விரண்டு பூங்காவனங்களும் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்தன என்பது மணிமேகலையினால் அறியப்படுகின்றன. ஆனால், பட்டினப்பாக்கத்தில் இருந்தனவா மருவூர்ப்பாக்கத்தில் இருந்தனவா என்பது தெரியவில்லை.

"வெங்கதிர் வெம்மையின் விரிசிறை யிழந்த
சம்பாதி யிருந்த சம்பாதி வனமும்
தவாநீர்க் காவிரிப் பாவைதன் தாதை
கவேரனாங் கிருந்த கவேர வனமும்
மூப்புடை முதுமைய தாக்கணங் குடைய
யாப்புடைத் தாக அறிந்தோர் எய்தார்."

என்று இவைகளைப் பற்றி மணிமேகலை கூறுகிறது.

**பரப்பு** :—காவிரிப்பூம்பட்டினத்தின் அகல நீளம் எவ்வளவு பரப்புடையது என்பது அறியக்கூடவில்லை. ஆனால்,

"காதம் நான்கும் கடுங்குரல் எடுப்பிப்
பூதம் புடைத்துணும் பூத சதுக்கமும்."

என்று சிலம்பு 5-ஆம் காதை அடிகளுக்கு உரை கூறுகிற அரும்பத உரையாசிரியர், "காத நான்கும—ஊர்சூழ்ந்த நாற்காதவட்டகை," என்று உரை கூறுகிறார். அடியார்க்கு நல்லார், "காத நான்குமென முற்றும்மை கொடுததலானே ஊர் நாற்காத வட்டகை என்பதுணர்க" என்று எழுதுகிறார். காதம் என்பது மூன்று மைல். எனவே நாற்காதவட்டகை என்பது பன்னிரண்டு சதுர மைல் ஆகும். அஃதாவது சங்ககாலத்துக் காவிரிப்பூம்பட்டினம் பன்னிரண்டு சதுரமைல் இருந்ததென்பது பெறப்படும்.

**புலவர்கள்** :—கீழ்க்கண்ட புலவர்கள்பெயர் சங்கநூல்களில் காணப்படுகின்றன. காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்; காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்; காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்; காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணனார்; காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகன் மகனார் நப்பூதத்தனார். இவர்கள் பட்டினப்பாக்கத்தில் இருந்தவர் என்று யூகிக்கப்படுகின்றனர்.

மருவூர்ப்பாக்கத்தில் இருந்த புலவர்கள் :—மருங்கூர்ப் பட்டினத்துச் சேந்தன் குமரனார்; மருங்கூர் கிழார் பெருங்கண்ணனார்; மருங்கூர்ப்பாகை சாத்தன் பூதனார்.

இதுகாறும் ஆராய்ந்த இச்சிற்றாராய்ச்சியினாலே, சங்ககாலத்திலிருந்த காவிரிப்பூம்பட்டினத்தின் அமைப்பை ஒருவாறு தெரிந்துகொண்டோம்.

# விண்ணப்பம்*

சென்னை தியாகராயநகர் இராகவையா வீதி 10-ம் எண்ணுள்ள மேற்படி சங்கநிலையத்தில், 25-3-51-ம் நாள் திரு. வி. ஐ. முனுசாமி பிள்ளை M.L.A., அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட தூதுக்குழு உறுப்பினர்களாகிய நாங்கள் கீழ்க்கண்டவற்றைத் தங்களுடைய கவனத்துக்குக் கொண்டுவருகின்றோம்.

சித்த மருத்துவமுறை பல்லாயிர ஆண்டுகட்கு முன்பிருந்தே தமிழ்நாட்டுப் பழைய சித்தர்களாலும், சித்தமருத்துவப் பண்டிதர்களாலும் பரம்பரையாய்க் கையாளப்பட்டு வருகிறது. தென்னாட்டு வெப்பதட்பம், மக்களின் உடல்நிலை, உணவு, பழக்க வழக்கங்களுக்குப் பொருந்தச் சித்தமருத்துவம் வளர்ச்சியுற்றிருப்பதால் மக்களின் நோய் தீர்ப்பதில் மிகப் பயனுள்ளதாயிருக்கிறது. நோயின்றி நீண்டநாள் வாழவும் சித்தமருத்துவம் வழிகாட்டுகின்றது. தென்னாட்டில் மக்கள் தோன்றினகால முதல் நம் முன்னோர்களின் நீண்டகாலப் பயிற்சி, ஆராய்ச்சி, அனுபவம் இவற்றால் இங்குக் கிடைக்கின்ற பச்சிலை மூலிகைகள் மற்றும் அநேக மருந்துப்பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆகையால் இம்மருநதுகள் சிறந்தனவாயும், எளியவாய்க் கிடைக்கக்கூடியனவாயும், மலிவாகவும் உள்ளன. இம் மருத்துவ முறை வளர்ச்சியுற்றால் இறக்குமதியாகும் மருந்துகளின்மூலம் அயல்நாட்டுக்குச் செல்லும் நமது பெருஞ்செல்வம் மீட்கப்படும் மேலும், இந்திய மருந்துகள் இந்நாட்டின் வெப்ப, தட்ப, சமூகநிலைகளுக்கு ஒத்திருப்பதுபோல் மேல்நாட்டு மருந்துகள் நம்நாட்டுக்கு உகந்தனவையல்ல.

இந்த மருத்துவமுறையை முன்னோர்களிடமிருந்து பரம்பரையாய்க் குருகுலமுறைப்படி கற்று, மருத்துவம் செய்கின்றவர்கள் தென்னாட்டில் பலர் உள்ளனர். அவர்கள் தமிழிலுள்ள பல உயரிய மருத்துவநூல்களைப் பயன்படுத்துகின்றனர்.

இவர்களில் ஒருசிலரே இந்திய மருத்துவ நடுச்சபை (Indian Medical Central Board) யாரால் பதிவு செய்யப்பட்டுள்ளனர். பதிவாகாத பெரும் பகுதியினர் பதிவுக்காகக் காத்துக்கொண்டுள்ளனர். அவர்களில் சிலர் ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பதிவுக் கட்டணம் செலுத்தி விண்ணப்பங்கள் அனுப்பியுள்ளனர். இத்தனை ஆண்டுகட்குப் பின்னர்

---

* சென்னை மாநில முதல் அமைச்சர் பி. எஸ். குமாரசாமிராஜா அவர்களிடம் தென். இந்திய சித்த வைத்திய சங்கத்தார் அறிவித்தது.

அவர்களுடைய விண்ணப்பங்கள் புறக்கணிக்கப்பட்டு, விண்ணப்பங்களோடு செலுத்திய பதிவுக்கட்டணம் திருப்பி அனுப்பப்படுவதாக அறிகின்றோம். மேற்கண்ட விண்ணப்பதாரர்களின் கவலையைக் கருணையோடு கவனித்து ஆவனசெய்ய வேண்டுகின்றோம். மேற்கண்ட பதிவாகாத மருத்துவர்கட்கு இருவித இடையூறுகள் உள்ளன. முதலில் பொதுமக்களால் பதிவான மருத்துவர்களைவிட இவர்கள் குறைவாக மதிக்கப்படுகின்றார்கள். இரண்டாவதாக மருந்துகளுக்கு அவசியமான பொருள்களில் சில கட்டுப்பாட்டின்கீழ் பதிவான மருத்துவர்கட்குமட்டுமே அளிக்கப்படுவதால் மேற்கூறிய பதிவாகாத மருத்துவர்கள் தங்களுக்கு வேண்டிய மருந்துகளைத் தயாரிக்க முடியாது வருந்துகின்றனர். மிகுந்த அனுபவமும், பரம்பரை அறிவும் திறமையுமுடைய இவர்கள் நிலையைக் கவனித்து அவர்களைப் பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

சுமார் முப்பது ஆண்டுகட்குமுன்னர் காலஞ்சென்ற பனகால் அரசர் மந்திரி சபையின்போது சித்த, ஆயுர்வேத, யுனனி போன்ற இந்திய மருத்துவங்களில் மாணவர்கட்குப் பயிற்சி அளிக்க இந்திய மருத்துவப்பள்ளி தோற்றுவிக்கப்பட்டது. இப்போது அதில் எஸ். எஸ். எல். சி. பரீட்சையில் தேறின மாணவர்கள்மட்டுமே சேர்க்கப்பட்டு வருகின்றனர். அனுபவத்தில் பார்க்குமிடத்து இந்திய மருத்துவத்தில் தேர்ச்சிபெற மேற்கண்ட எஸ். எஸ். எல். சி. ஆங்கிலப்படிப்பு தேவையில்லை. ஆந்திர மாவட்டங்களில் சில ஆயுர்வேதக் கல்லூரிகளில் தெலுங்கிலேயே பாடங்கள் கற்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மலையாளத்திலும் அத்தகைய கல்லூரிகள் நடைபெறுகின்றன. அதிற் பயிற்சிபெறும் மாணவர்கள் அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளபபெற்று நன்றாய்த தொழில் செய்கின்றனர்.

அரசினரும், தமிழ்ச்செல்வர்களும் அம்மாதிரி தமிழ்நாட்டிலும் சித்த மருத்துவக் கல்லூரிகள் தோற்றுவிக்க வேண்டுமென்பது எங்கள் கோரிக்கை. அதில் தமிழில் ஓரளவு பயிற்சி உள்ளவர்களைச் சேர்த்துக்கொள்ளலாம். தமிழில் செய்யுள் வடிவிலுள்ள மருத்துவ நூல்களை நன்றாய் அறிந்துகொள்ளும் பொருட்டு அவர்களுக்கு முதல் இரண்டுஆண்டுகளில் தமிழ் இலக்கியப் பயிற்சி அளித்து, மீதி இரண்டு ஆண்டுகளில் மருத்துவப் பயிற்சிமட்டும் அளிக்கலாம். இம்மாதிரி ஏற்பாடுகளின் மூலமே கிராமங்களிலுள்ள பெரும்பகுதி மக்களுக்குப் பயன்படும்படியாக மருத்துவர்கள் பலரைத் தயாரிக்க முடியும். இதனால், பரம்பரை மருத்துவர்களுக்கு ஒரு கல்விநிலையத்தில் சேர்ந்து ஒழுங்கான பயிற்சிபெறும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

தற்போது அவர்களில் பலர் எஸ். எஸ். எல். சி , இண்டர்மீடியட் வரை படித்து மருத்துவப்பள்ளியிலோ, கல்லூரியிலோ சேர இயலாத நிலையில் உள்ளனர். ஆதலின், தமிழ்நாட்டில் மேற்கண்ட முறையில் மருத்துவக் கலாசாலைகளை மாவட்டத்திற்கொன்று வீதம் நிறுவி உதவும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம். கிராமங்களிலுள்ள ஏழைமக்களுக்கு மருத்துவ வசதி அரிதாயிருப்பதாலும், பொதுமக்கள் சித்தமருத்துவத்தின் பயனை உணர்ந்திருப்பதாலும் அரசினர் இதன் வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுத்தால் நாட்டிற்கு நன்மை பல உண்டு. பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட எல்லா மாணவர்கட்கும் சிகரெட்டு, பீடி, பொடி போன்ற தீமைகளில் பழகாமல் மூச்சுப்பயிற்சி (பிராணயாமம்), நோயணுகா விதிகள் முதலிய நல்லொழுக்கப்பாடம் கற்பிக்கப்படவேண்டும். பாடங்களின் கால அட்டவணையிலேயே இம்மாதிரி இன்றியமையாத பண்டைய நல்லொழுக்க முறைகள் சேர்க்கப்படவேண்டும். சித்த மருத்துவ வளர்ச்சிபற்றிக் கலந்து ஆலோசிக்க இந்தச் சங்கத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

தமிழ்நாட்டின் சிறந்த அறிஞர்களில் ஒருவரான தாங்கள் தமிழ்நாட்டின் பழமையானதும் சிறந்ததுமான இம்மருத்துவ முறை வளர்ச்சியடைய ஆவன செய்வீர்களென நம்புகின்றோம்.

இங்ஙனம் தூதுக் குழுவினர்,

வி. ஐ. முனுசாமிப் பிள்ளை அவர்கள் M.L.A.
எஸ். ராமசாமி நாயுடு அவர்கள், முன்னாள் மேயர்.
கே. டி. கோசலராம் அவர்கள் M.L.A.
T. M. மார்க்கசகாய செட்டியார் M.A.,B.L.,L.T.
பண்டித S. S. ஆனந்தம் அவர்கள்.
நாரண துரைக்கண்ணன் அவர்கள்.
W. P. துளசிங்க முதலியார் அவர்கள்.

தென் இந்திய சித்தவைத்திய சங்கம்.
10. இராகவய்யா வீதி, தியாகராய நகர், சென்னை.

தென்னிந்தியத் தமிழ்ச் சங்கம்

1951 மாசித் திங்களில் நடத்திய

# புலவர்மாணவர் தேர்வுத்தகுதி விளக்கம்

## ஸ்ரீ பாலையானந்த சுவாமிகள் தமிழ்க் கல்லூரி - மயிலம்

| பதிவெண் | மாணவர் பெயர் | தேர்வு வகுப்பு | | தேர்வுத் தகுதி |
|---|---|---|---|---|
| 1. | பா. தங்கவேலு | இறுதி நிலை | | க |
| 3. | சு. பரமசிவம் | ,, | | ங |
| 4. | இலக்குமிபதி | ,, | | உ |
| 1. | வெ. பத்மதேவி | முதனிலை | | ,, |
| 2. | சு. சிவகாமி | ,, | | ங |
| 3. | வை. இரத்தினசபாபதி | ,, | 3-ம் பரிசு | க |
| 1. | சி. கண்ணப்பன் | புகுமுகம் | | உ |
| 2. | தெ. வ. அனந்தராமன் | ,, | | ங |
| 4. | வி. நாராயணசாமி | ,, | | ,, |
| 5. | கி. வீரராகவன் | ,, | | ,, |
| 6. | பத்மனுபன் | ,, | | உ |
| 7. | வெ. பத்மாவதி | ,, | | ங |
| 8. | எஸ். கெம்பீரம்மாள் | ,, | | ,, |
| 9. | கு. பாலசிரோமணி | ,, | | உ |
| 10. | ந. ஏகாம்பரம் | ,, | | ங |

## S. V. O. கல்லூரி - திருப்பதி

| பதிவெண் | மாணவர் பெயர் | தேர்வு வகுப்பு | தேர்வுத் தகுதி |
|---|---|---|---|
| 6. | கே. எஸ். முனிசாமி | இறுதிநிலை | உ |
| 4. | பெ. கு. ஊரப்பன் | முதனிலை | ,, |
| 5. | ந. சம்பத்து | ,, | ,, |
| 7. | ஆர். மாயாண்டி | ,, | ங |
| 8. | ஓ. குப்புசாமி | ,, | ,, |
| 9. | க. வேங்கடசாமி | ,, | ,, |
| 41. | அரு. தட்சிணுமூர்த்தி | ,, | ,, |
| 11. | துரை. திருமால் | புகுமுகம் | ,, |
| 13. | ஜே. வி. பெருமாள் | ,, | ,, |
| 14. | கே. மாணிக்கம் | ,, | உ |

## காசிவாசி சுவாமிநாதசுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரி-திருப்பனந்தாள்

| பதிவெண் | மாணவர் பெயர் | தேர்வு வகுப்பு | | தேர்வுத் தகுதி |
|---|---|---|---|---|
| 8. | எஸ். இராமலிங்கம் | இறுதிநிலை | | ங |
| 9. | மு. கணபதி | ,, | | ,, |
| 10. | சு. தி. சங்கரநாராயணன் | ,, | | ,, |
| 11. | வி. வி. நடராசன் | ,, | 3-ம் பரிசு | க |
| 12. | எஸ். அல்லமா பிரபு | ,, | | ங |

| | | | | |
|---|---|---|---|---|
| 15. | எஸ். சிவாஜி | முதனிலை | | உ |
| 16. | மா. திருநாவுக்கரசு | ,, | | க |
| 17. | அ. சிவராம சேது | ,, | | ,, |
| 18. | சி. சுப்பிரமணியன் | ,, | | ,, |
| 19. | து. செல்லையா | ,, | முதற்பரிசு | ,, |
| 20. | சா. ர. கிருஷ்ணமூர்த்தி | ,, | | ,, |
| 21. | டி. வி. சீனிவாசன் | ,, | | ,, |
| 22. | எம். வி. செயராமன | ,, | | உ |
| 23. | எஸ். இராசகோபாலன் | ,, | | க |
| 24. | தி. கு. கோவிந்தராசன் | ,, | | ,, |
| 25. | ஆர். நாராயணன் | ,, | | உ |
| 19. | எம். முத்துகிருஷ்ணன் | புகுமுகம் | | ௩ |
| 21. | கே. கிருஷ்ணன் | ,, | | ,, |
| 22. | இரா. வேதையா | | | உ |
| 23 | சு. இராமசசந்திரன் | ,, | | ௩ |
| 24. | மு. பாலகிருஷ்ணன் | ,, | | உ |
| 25. | எஸ். பரமசிவம் | ,, | | ,, |
| 26. | சு சடையப்பன் | ,, | முதற்பரிசு | க |
| 27. | இரா. சானகிராமன் | ,, | | உ |

## கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி—தருமபுரம்

| பதிவெண் | மாணவர் பெயர் | தேர்வு வகுப்பு | | தேர்வுத் தகுதி |
|---|---|---|---|---|
| 11. | சோ. சிங்காரவேலன் | முதனிலை | 2-ம் பரிசு | க |
| 12. | மா. ச. சுப்பிரமணியன் | ,, | | ௩ |
| 13. | அ. வேணுகோபால் | ,, | | உ |
| 15. | சி. சம்புலிங்கம் | புகுமுகம் | | ,, |
| 16. | இரா. சொக்கலிங்கம் | ,, | | ௩ |
| 17. | சு. தியாகராசன் | ,, | | ,, |
| 18. | சா. முத்துக் குமரசாமி | ,, | | ,, |

## அரசர் கல்லூரி—திருவையாறு

| பதிவெண் | மாணவர் பெயர் | தேர்வு வகுப்பு | | தேர்வுத் தகுதி |
|---|---|---|---|---|
| 13. | ப. உருத்திரமணி | இறுதிநிலை | 2-ம் பரிசு | க |
| 14. | டி. எஸ். கங்காதரன் | ,, | முதற்பரிசு | ,, |
| 15. | ஆர். கிருட்டினசாமி | ,, | | ௩ |
| 16. | சு. சணமுகம் | ,, | | க |
| 17. | சு. சொர்ணகாழீச்சுரன் | ,, | | ௩ |
| 26. | வே. இராசன் | முதனிலை | | ,, |
| 27. | த. இராமமூர்த்தி | ,, | | ,, |
| 28. | கோ. இராமன் | ,, | | ,, |
| 29. | சி. கோபாலன் | ,, | | ,, |
| 31. | சின்னத்தம்பி | ,, | | உ |
| 32. | ப. பாலசுப்பிரமணியன் | ,, | | ௩ |
| 33. | டி. மாணிக்கம் | ,, | | ,, |
| 34. | சா. முத்துக்குமாரசாமி | ,, | | க |

| | | | | |
|---|---|---|---|---|
| 35. | பெ. வீரமலே | முதனிலை | | ரு |
| 36. | வி. மகாலிங்கமையர் | ,, | | ,, |
| 29. | அ. சின்னத்தம்பி | புகுமுகம் | | ,, |
| 30. | வெ. சுதரிசனம் | ,, | | ,, |
| 31. | அ. திருநாவுக்கரசன் | ,, | | ,, |
| 32. | க. நாராயணசாமி | ,, | 2-ம் பரிசு | க |
| 33. | கே. பக்தவத்சலம் | ,, | | ரு |
| 35. | மா. விசுவநாதன் | ,, | | ,, |

## கணேசர் செந்தமிழ்க் கல்லூரி - மேலச்சிவபுரி

| பதிவெண் | மாணவர் பெயர் | தேர்வு வகுப்பு | | தேர்வுத் தகுதி |
|---|---|---|---|---|
| 18 | அ. இரா. திருவேங்கடம் | இறுதி நிலை | | உ |
| 39. | நா. கன்னையா | புகுமுகம் | | ரு |
| 42. | க. முத்தானந்தம் | ,, | | ,, |
| 45. | சோ. வெ. சோக்கலிங்கச் செட்டியார் | ,, | 3-ம் பரிசு | க |

நெல்லை,
28-4-51

பு. சி. புன்னைவனநாதன்,
புலவர் குழுத்தலைவர்,
தென்னிந்திய தமிழ்ச் சங்கம்.

---

குறிப்பு :—திருநெல்வேலியில் இச்சங்கச்சார்பில் ஆசிரியர்கள் தமிழ்ப் பயிற்சியடைய விரும்புவோர் இவர்களின் தமிழ்ப்புலமை வளர்ச்சி கருதி நடைபெற்றுவரும் "ஆசிரியர் தமிழ்ப்பயிற்சிக் கல்லூரியில்," சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் பட்ட வகுப்புப்பாடங்களும், முதனிலை, புகுமுகத் தேர்வுக்குரிய பாடங்களும் கழகப்புலவர் பெருநாவலர் பு. சி. புன்னைவனநாத முதலியாரால் நாடொறும் கற்பிக்கப்படுகின்றன. சேர்ந்து படிக்க விரும்புவர் மாதச்சம்பளமாக ரூ. 3, 2, 1 கொடுத்துப் பயிலலாம். வெளியூர்களிலிருந்து பயில விரும்புபவர்கட்கும் அஞ்சல்வழிப் பாடங் கற்பிக்க ஏற்பாடு செய்யப்படும். விரைந்து சேர்ந்து பயனடைக.

# பாரதிதாசனர் வெள்ளணி விழா

[செல்லூர்க்கிழார், செ. ரெ. இராமசாமிபிள்ளை]

நம் செந்தமிழணங்கிற்குப் பண்டைக்காலமுதல் இற்றை நாள்வரை அணிபல பூட்டி அணிசெய்வித்த புலவர் பெருமக்கள் பலர்; அவர்களுள் காலத்துக்கேற்ற முறையில் வாடா மலாமாலை அணிவித்த கவிஞர்வழியில் தோன்றியவர் நம் புதுவைக்கவி பாரதிதாசனாரவர்கள்.

சொன்னலமும் பொருணலமும் கனிந்த இவர்கள் பாக்கள் தமிழ்நாட்டிற்குச் சீர்திருத்த உணர்ச்சியை உண்டாக்கின. தமிழ்நாட்டிற்குத் தற்காலத்துக்கேற்றவாறு புதுப்புதுக் கருத்துக்களை உணர்ச்சி ததும்ப அள்ளி வீசும் அருட்கவி நம் பாரதிதாசனர். இவர்தம் பாக்கள் ஒவ்வொரு துறையிலும் ஈடும் எடுப்பும் அற்றுக் கற்ருர் நெஞ்சை அள்ளும் சிறப்பு வாய்ந்தன. தமிழ்நாட்டுப் பூங்காவனத்தில் தமிழ்க்குயிலாக நின்று கூவினர். 'குடும்ப விளக்கு', 'எதிர்பாரா முத்தம்', 'வீரத்தாய்', 'பில்கணீயம்' முதலியன அக்குயிலின் குரலாக முகிழ்த்து உதிர்ந்த அருமணிகள். 'குடும்ப விளக்கு' தமிழர் இல்லறவாழ்வின் சிறப்பை விளக்குவது. 'எதிர்பாரா முத்தம்' காதலன்பின் கட்டற்ற உயரிய நிலையையும், தமிழ்நாட்டுப்பற்றையும் விளக்கும் ஓர் ஓவியமாக அமைந்துள்ளது. 'வீரத்தாய்' பெண்மையின் நெறிமுறை தவறு வீரத் திண்மையை மீக்கூறுவது. 'பில்கணீயம்' புரட்சி காட்டும் புதுமை நிறைந்த காவியமாக அமைந்துள்ளது. இயற்கைக் காட்சிகள், காதற் பண்புகள், கலைப் பண்புகள், தமிழ்ப் பற்றை மிகுவிக்கும் பலப்பல பாடல்கள் கவிஞரால் மேலும் பாடப்பெற்றுள்ளன. அவைகளின் கருத்தும் பாநயமும் சுவைப்பாரால் சுவைத்துச் சுவைத்துப் பருகும் இன்னறும் கனிச்சாறெனநிறைந்துள்ளன. அவை 'பாரதிதாசன் கவிதைகள்' என்னும் பெயரால் முன்னரே வெளிவந்துள்ளன.

எளிமையும் இயற்கையும் கொண்டு பாவிலக்கணப் பிழையின்றி அமைக்கும் பண்பு பாரதிதாசனர் ஒருவர்க்கே உரிய தனிச்சிறப்பாகும். 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' என்னும் காவியப் பகுதியில்,

"குயில்கூவிக் கொண்டிருக்கும்; கோலம் மிகுந்த
மயிலாடிக் கொண்டிருக்கும்; வாசம் உடையநற்
காற்றுக் குளிர்ந்தடிக்கும்; கண்ணாடி போன்றநீர்
ஊற்றுக்கள் உண்டு; கனிமரங்கள் மிக்கஉண்டு;

'பூக்கள் மணங்கமழும் ; பூக்கள்தொறும் சென்றுதேன்
ஈக்கள் இருந்தபடி இன்னிசைபா டிக்களிக்கும் ;
வேட்டுவப் பெண்கள் விளையாடப் போவதுண்டு ;
காட்டு மறவர்களும் காதல்மணம் செய்வதுண்டு ;
நெஞ்சில் நிறுத்துங்கள் ; இந்த இடத்தைத்தான்
சஞ்சீவி பர்வதத்தின் சாரல்என்று சொல்லிடுவார்."

இப்பாட்டு உரைநடைபோல் பா அமைப்பு மாறுமல் அமைந் திருக்கும் சிறப்பால் பாரதிதாசரின் இயற்கைக் கவித்திறப்பாடு புலனுகின்றது.

கவிஞர் பாரதிதாசனுர்க்குச் சொற்கள் தாமாகவே வந்து பணிபுரிகின்றன ; கட்டுக்கடங்காத வெள்ளம்போல் கவிகள் ஒன்றன்பின் ஒன்ருக வருகின்றன. அவைகளுள் உணர்ச்சிகள் உவமைப்பண்புகள் இன்னேசை நயங்கள் யாவும் துள்ளிக் குதிக்கின்றன.

இயற்கைக் காட்சியை வரையுங்கால் நம் கவிஞர்,

"மாலைப் போதில் சோலையின் பக்கம்
சென்றேன் ; குளிர்ந்த தென்றல் வந்தது;
வந்த தென்றலில் வாசம் கமழ்ந்தது ;
வாசம் வந்த வசத்தில் திரும்பினேன்
சோலை நடுவில் சொக்குப் பச்சைப்
பட்டுடை பூண்டு படர்ந்து கிடந்து
குலுக் கென்று சிரித்த முல்லை
மலர்க்கொடி கண்டேன் மகிழ்ச்சி கொண்டேனே."

என்பதில் முல்லைமலரின் மலர்ச்சியைப் படிப்பார் நெஞ்சம் பதிந்து இன்படையுமாறு ஆக்கித் திறம்பட அமைக்கும் சிற்பி யான கவிஞரின் பண்பாடு என்னே ! என்னே !

இத் தகையராம் நம் அருமைக் கவிவேந்தர்க்கு இச் சித்தி ரைத் திங்கள் கூ-ஆம் நாள் அறுபான் ஆண்டு நிறைவுத் திரு நாள் நிறைவுற்றது, அந் நன்னுளைத் தமிழ் நாடெங்கணும் கொண்டாடினர் ; அறிஞர் பலர் போற்றினர் ; புகழ்ந்தனர் ; இவ்வாறு வெள்ளணிவிழா எய்திய நம் கவியரசர் புகழ் யாண்டும் பரவுக ; திசையனைத்தும் தமிழ் வெல்க ; ஒவ்வோர் தமிழர் உள்ளங்களிலும் பாரதிதாசனார் பொன்மொழிகள் நிலைக்க ; அவர் நற்புகழுடன் பன்னெடுங்காலம் மகிழ்ந்து வாழ்வாராக.

வாழ்க பாரதிதாசனுர் !

# செய்திகளும் குறிப்புகளும்

## தமிழ் வளர்ச்சிக் கழகம்—நான்காவதாண்டு விழா

இவ்விழா யாழ்ப்பாணத் திருநகரின்கண் பரமேச்சுவரக் கல்லூரியில் ஏப்பிரல் திங்கள் இருபத்தொன்பது, முப்பதாம் நாட்களிலும், மே முதனுளும் மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. இருபாலாரும் பதின்ஐயாயிரவர்க்குமேல் மிக்க ஆர்வத்துடன் வந்து குழுமியிருந்தனர். நானூறவர்க்குமேற்பட்ட பேரறிஞர்களும் மூப்பர்க(Delegate)ளும் வீற்றிருந்தனர். விழாத்தலைவர் திரு. சி. ஆர். ஸ்ரீனிவாசன் அவர்கள் ஆவர். தலைவர் அவர்கள் "தமிழில் சொல்லமுடியாத நவீனக் கருத்து இல்லை," என்பதை எவரும் ஒப்புக்கொண்டொழுகும் முறையில் அழகுற அறுதியிட்டு மொழிந்தனர்.

இக்கழகம் தொன்மைச் சங்கங்களேபோன்று அறிவு வளர்ச்சியும், அறமுறையும், ஆக்கமும், நலவாழ்வும், பண்பாடும், ஒற்றுமையும், உலகப் பொதுமையும் ஓங்கிப் பெருகற்குப் பெருந்துணைபுரியும் பயன்மிகு செந்தமிழ்நூல்கள் பலதுறையிலும் நயனுடும் யாத்து நல்கிய நாவலர் பெருமக்களையும் ஏனைப் புலவர்களையும் ஊக்குமுகத்தான் தக்க நூல்களை யாய்ந்து அரஙகேற்றம் செய்து மிக்க பரிசுகளும் நற்சான்றிதழ்களும் வழங்கிவருகின்றது. அம்முறைபோல் ஈண்டும் வழங்கப்பெற்றுள்ளது. இச்செயல் தமிழ் ஓம்பும் தனிச்சிறப்பாகும்.

கலைக் கண்காட்சியும் கவினுற நிகழ்ந்தது. பெரும்புலமையும் பேரறிவும் பெற்றுள்ள பெருமக்கள் பலர் பெரும்பொருள் பலவற்றைப்பற்றி விரிவுரை நிகழ்த்தினர்கள். அவர்களுள் முன்னணி எய்தியவல்லார் வருமாறு : திருவாளர் வாசன், அவிஞசிலிங்கஞ் செட்டியார், எஸ். நடேசன், டாக்டர் கே. எஸ். கிருட்டிணன், கே. வைத்தியநாதன், ஆர். பி. சேதுப் பிள்ளை, பெரியதம்பி, சிவஞானக் கிராமணியார் முதலியோராவர்.

முன்நிகழ்ந்த மூன்று விழாக்களும் முறையே மதுரை, திருவாரூர், கோயமுத்தூர்களைச் சிறப்பித்தன. இவ்விழா ஈண்டு நிகழ்வதில் தனிச் சிறப்பொன்றுளது; என்னை? கடல்கடந்து உலகம் முழுதும் பரவியுள்ள நம் தொன்மைத் தமிழ் மக்களுள் ஈண்டுவாழ்வார் நம் தென்னுட்டுக் கண்மையிலிருப்பதுடன், பெருந் தொகையினராய்ப் பெரும் புலவராய்த் தாய்மொழியாம் தமிழ்பேணும் பேரார்வத்தராய் நம்மொடு கொண்டும் கொடுத்தும் குடிசெய்பவராய்க் கூடிவாழும் பெருநலத்தான் என்க.*

## நூல்நெசவுக்குப் பாராட்டு

"தமிழ் வளர்ச்சிக் கழகம்—பாராட்டுப் பத்திரம் 1948—49-ஆம் ஆண்டுகளில் வெளியான நூல்களில் கைத்தொழில் பகுதியிலே "நூல் நெசவு" என்னும் நூல் பாராட்டிற்குரியதெனத் தேர்ந்தெடுக்கப்பட்டு அதன் ஆசிரியர் திரு. பெ. கோவிந்தன் அவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ்த்திருவிழாவில் இப்பாராட்டுப் பத்திரம் வழங்கப்பெற்றது. (ஒப்பம்) தி. சு. அவிஞசிலிங்கம்—தலைவர், தமிழ்வளர்ச்சிக் கழகம். (படி) பாராட்டுப் பெறற்குரிய தகுதிவாய்ந்த நூலையும் ஆசிரியரையும் நாமும் பாராட்டுகின்றோம். தமிழுலகமும் அவ்வாசிரியரை மேன்மேல் ஊக்கிப் பல்பெரும் நூற்களை அவர்வழித் தமிழ்த்தாய்க்கு அணிவித்துப் பயன் எய்துமாக.

---

* குறிப்பு: முழுவிளக்கமும் பின்வரும்.

### வர்லர்ஜாபாத் இந்துமத பாடசாலை—
### முப்பத்தைந்தாம் ஆண்டுநிறைவு விழா

இக்கல்லூரி தமிழ்நாட்டுக்குத் தக்க பயனளித்துவருகின்றது. கல்லூரியைக் கண்ணெனக் கருத்தென உயிரென ஓல்லும்வகை ஓவாது ஓம்பி வளர்த்துவரும் திரு. மாசிலாமணி முதலியார் அவர்கள், அவர்தம் உளமொத்த துணைவர்கள் நீடுவாழ்ந்து இதனைக் கல்லூரியாய்ப் பல்கலைக் கழகமாய்ப் பலவுலகத்தாரும் மதித்துப் பயன்பெறும்படிசெய்ய ஆண்டவன் அருள்புரிவானாக. சீரும் சிறப்பும் வாய்ந்த செல்வர்கள் வேண்டும் துணை புரிவார்களாக.

நிறைவுவிழா தக்கார் தலைமைக் கண்ணும் மிக்க பெரும்புலவர் விரிவுரையாலும் 22-4-51ல் சிறப்புற இனிது நிகழ்ந்தது. மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பெற்றன. தலைவர் திரு. கே. காமராஜ் நாடார் (த. நா. கா. க. தலைவர்) அவர்கள், பரிசு வழங்குவோர் தேவகோட்டை சித்தாந்தப் புரவலர்—தமிழ்வள்ளல் திரு. உ. ராம மெ. சுப. சேவு. மெ. மெய்யப்பச் செட்டியார் அவர்கள், விரிவுரையாளர்: சென்னை நகராண்மைக் கழகத் துணையாளர் திரு. என். சங்கரன் எம். ஏ., எல். டி., அவர்களாவர்.

நாற்பத்தீராயிரம் வெண்பொன் செலவில் அமைக்கப்போகும் 'இல்லத்தின் இரண்டாங்கட்டிடக் கால்கோள் விழா' ஆற்றுந் தலைவர் சென்னை மாகாணக் கல்வித்துறைத் தலைவர் (Director of Public Instruction) இராவ்பகதூர் திரு. வி. ஆர். அரஙகநாத முதலியார் எம். ஏ., பி. லிட்., (ஆக்சன்) அவர்கள்.

### மறைமலை அடிகள்—கவி அரங்கம், வேகுப்பட்டி

வேகுப்பட்டியில் ஏப்பிரல் 22-ஆம் நாள் பூச்சொரி விழாவை முன்னிட்டு **மறைமலை அடிகள்—கவி அரங்கம்** மாலை நான்கு மணிக்கு நிகழ்ந்தது. அடிகள் விழாக் கொண்டாடப்பெற்றது. திரு. கண்ணப்பன் எம். ஏ. அவர்கள் யாவரையும் வரவேற்றனர். புலவர் திரு. க. ஆறுமுகனார் பி. ஓ. எல். தலைமை தாங்கினர். மறைமலை அடிகளாரின் திருவுருவப்படத்தைத் தலைவரே திறந்துவைத்தனர்.

புலவர் திரு. மெ. சுந்தரம் அவர்கள் "இருபதாம் நூற்றாண்டின் மொழி வளர்ச்சிக்கு அடிகள் ஓர் அளவுகோல்" என்றனர். அடிகளாரின் "தமிழ்ப்புலமை, தனித்தமிழ், பிறகலைப்புலமை, ஆராய்ச்சித்திறன், ஒழுக்கம் ஆகிய ஐந்து தலைப்புகளிட்டுத் தனித்தனியே புலவர்கள் வே. அண்ணாமலை, கதி. சுந்தரம், மெ. சுந்தரம், மு. இளநாகன், அ௳. இராமநாதன் ஆகிய ஐவரும் கவியரங்கேற்றம் செய்தனர்.

தலைவரவர்கள் முடிப்புரையும் திரு. நாக. சண்முகம் நன்றியும் வாழ்த்தும் நிகழ இனிது நிறைவுற்றது.

### அப்பர் திருநாள்

செந்நெறிச் செல்வர் நால்வருள் "திருநின்ற செம்மையே செம்மையாக்கொண்ட திருநாவுக்கரையர்" என்னும் அப்பர்பெருமான் திருப்புகலூரில் வீடுபேறெய்திய சித்திரைச் சதய நன்னாள் (30-4-51) மாலை ஐந்துமணிக்குக் கழக **அப்பர் அச்சக** மாடியில் சிறப்புடன் வழிபாடு நிறைவேறியது.

கழகப் புலவரால் அடிகள் வரலாறு இனிதெடுத்து இயம்பப்பெற்றது. குழுமியிருந்த அன்பர்களுக்குப் பொங்கற்படைப்பு முதலியன வழங்கப்பெற்றன.

## தூத்துக்குடி, சைவசித்தாந்த சபையின் 67-ஆம் ஆண்டு நிறைவு விழா

இவ்விழாப் பேரவை 1951 மே 12, 13-ஆம் நாட்களில் நடைபெறும். திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் தலைவர் பாகனேரி திரு. மு. காசிவிசுவநாதன் செட்டியாரவர்கள் பேரவையைத் தொடங்கிவைப்பார்கள்.

ஈரோடு, கலைமகள் கல்வி நிலையம் ஆணையாளர் திரு. எஸ். மீனாட்சி சுந்தர முதலியாரவர்கள் பி. ஏ. எல்., டி., விழாப் பேரவையின் தலைமை தாங்குவார்கள். அறிவுசான்ற புலவர் பெருமக்களாகிய திரு. ஆ. முத்துக் குமாரசாமியா பிள்ளையவர்கள், திருமதி K. A. முத்துலட்சுமி அம்மையாரவர்கள், ஔவை திரு. சு. துரைசாமிப்பிள்ளையவர்கள், திரு. சு. முருகேச முதலியாரவர்கள், திரு. சி. திருநாவுக்கரசுப் பிள்ளையவர்கள், திரு. கந்தசாமி முதலியாரவர்கள் எம். ஏ., திருமதி E. T. இராஜேஸ்வரி அம்மையாரவர்கள் எம். ஏ., எல். டி., முதலியோர் பல்வேறு பொருள்பற்றிப் பயனுடை விரிவுரையாற்றுவார்கள்.

செந்தமிழும் சிவனெறியும் சிறக்க வரும் செல்வர்கள் கேட்டுப் பயன் எய்துவார்களாக.

## திருவாவடுதுறை ஆதீனம் சிவத்திரு. அம்பலவாணப் பண்டாரச்சந்நிதிகள் இறைஅடி உறுதல்

1951 ஏப்பிரல் 12-ஆம்நாள் அம்பலவாண பண்டாரச்சந்நிதிகள் அவர்கள் அம்பலவாணர் அடிநிழல் எய்தினர். அவர்கள் அண்மையில்தான் தென்னாடு முழுவதும் திருநடைபோந்து திரும்பியருளினர்.

தம்பிரானவர்கள் யாரையும் தமக்குப்பின் தம்பிரானாக ஏற்படுத்தாமையால் குடந்தை நடுநிலை முறைமன்றநடுவர் (Sub Judge) அவர்கள் ஆணையின்பேரில் மடத்தின் மேலாளர் தம்பிரான்கள் எல்லாரையும் திருவிடைமருதூரில் கூட்டுவித்துப் பண்டாரசந்நிதிகளின் தேர்வு நிகழச்செய்ததில் சிவத்திரு. சுப்புகுட்டித்தம்பிரான் அடிகள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றாரெனத் தெரிகிறது.

அவ்வடிகள் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாச்சாரிய சுவாமிகள் என்னும் திருப்பெயருடன் பண்டாரச்சந்நிதிகள் ஆயினர். ஆதீனமும் சைவமும் அருந்தமிழும் நாடும் வாழ்க.

## திருநெறித்தொண்டர் கழகம்—மயிலாடுதுறை

இக்கழகத்தின் மூன்றாவது ஆண்டுநிறைவு விழா மெய்கண்டார்யாண்டு ௭௨௮ சித்திரைத்திங்கள் ௨௯-௩௦ (மே 12, 13) இரண்டு நாட்களிலும் பல அறிஞர் சொற்பொழிவுகளுடன் சிறப்புற நிகழும். முதல்நாள் பன்னிரு திருமுறைத்திருவிழா தமிழ்வள்ளல் சைவசித்தாந்தப் புரவலர் திரு. மெ. மெய்யப்பச் செட்டியாரவர்கள் தலைமையிலும், இரண்டாம் நாள் ஆண்டு (திருக்குறள்) விழா சென்னை மண்டில முன் முதலமைச்சர் ஓமந்தூர் திரு. பி. இராமசாமி ரெட்டியாரவர்கள் தலைமையிலும் நடைபெறும்.

---

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.